15

தொகுதி 9.] 1930௵ டி[...]ம்பர்மீ 1௳ [பகுதி 11

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



8-JAN

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த விஜயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகளுக்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி' இரத்தினபுரி இரகசியம் 3-ம் பாகம் என்ற நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 4-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | | 4 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ரூ. | | 3 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

---

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ

8 JAN 1931

ஆகவே இரங்கம்மாள் பேசாமல் கடவுள்விட்டவழி ஆகிறதெனச்சொல்லி இராஜம்மாளின் பின்னாலேயே கண் கட்டிக்கொண்டு நடப்பவள்போல் தட்டுத் தடுமாறிக் கொண்டே நடந்துசென்றாள். அவளுக்குச் சற்றும் தைரிய மென்பதே இல்லாமலிருந்தும் தன் நிலைமையை மறைத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தையொட்டி மரணாவஸ்தை போன்ற கொடியமுறைக்கும் உட்படவேண்டியவளானாள். ஆனால் இராஜம்மாளைப்பற்றியோ வாசகர்கள் முன்னமே அறிந்திருக்கிறீர்கள். தீயகுணங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து அவதார மெடுத்தாற்போன்றவள் என்று முன்னமே கூறி யுள்ளோம். சூழ்ச்சிகளும் மோசங்களும் அக்கிரமங்களுமே அவளுடைய குணநிசயம். ஆகவே அவள் இரங்கம்மா ளுக்குவேண்டிய தைரியத்தை யூட்டிக்கொண் டிருந்தா ளென்றாலும் அவள் மனம், தேகம் ஆகிய இரண்டிலும் பல கஷ்டங்களுக்குட்பட நேரிட்டதால் அவளால் தைரிய மடைய முடியவில்லை.

186552

இறுதியில் அவர்கள் சிறிது தூரத்தில் ஒரு வீட்டின் ஜன்னலினின்றும் சிறு வெளிச்சம் தோன்றுவதைக் கண் டார்கள். உடனே இராஜம்மாள் "அதுதான் நாம் போக வேண்டிய இடம்'' என்று தைரியமூட்டிக்கொண்டே கூறி னாள். தாங்களிருவரும் போகவேண்டிய இடம் இன்ன தென்று நேரில் கண்டும்கூட இரங்கம்மாள் சிறிதும் தைரி யத்தை யடையவில்லை. ஏனெனின், எதிரில் காணப்பட்ட விளக்கு, இறந்துபோனவர் இருக்கும் அறையில் இருப்பது போல் அவ்வளவு சிறு பிரகாசமுள்ளதாய்க் காணப்பட்டது. மேலும் அவ்விளமங்கையின் மனம் இத்தகைய அனுபவங் களை யறியாததாகையால் அந்நடுநிசியில் சிறிதும் சத்தமே யில்லாமல் இருந்த அத்தருணத்தில் அவர்களுடைய காலடி

36

களால் ஏற்பட்ட சிறுசத்தமும் அவளுக்கு அச்சத்தை உண்டாக்கிற்று. இரங்கம்மாள் அச்சத்தின் மிகுதியால் ஓவென்று வாய்விட்டலறி அழுதுவிடலாமா என்று நினைத்தபோது அவர்களிருவரும் மங்கலான வெளிச்சத்தோடுகூடிய சிறு விளக்கு எரிந்துகொண்டிருந்த அவ்வீட்டை யடைந்தார்கள். அக்கட்டடம் சிறிதாகவும், சிறைச்சாலைபோன்ற தோற்றமுடையதாகவும் இருந்தது. வயோதிகமாது ஒருத்தி அவ்வீட்டின் கதவைத்திறந்ததும் அவள் இராஜம்மாள் இரங்கம்மாள் ஆகியவர்களை அவ்வீட்டிலுள்ள ஒரு ஹாலுக்குள் அழைத்துச்சென்றாள். பிறகு சிறிதுநேரத்துக்கெல்லாம் அந்த ஹாலின் ஒருபுறத்திலிருந்த கதவு திறக்கப்பட்டதும் அங்குள்ள அறைக்குச்சென்றார்கள். அவ்வறையிலும் வெளியில் இருந்ததுபோன்ற மங்கலானபிரகாசத்தையுடைய சிறுவிளக்கொன்று இருந்தது. அவர்களிருவரும் அவ்வறையில் நுழைந்ததும் பின்னாலேயே மெல்லியதும் வெளுத்ததுமான தேகத்தையும், கூர்மையான பார்வையையுடைய கண்களையும், நடுத்தரவயதையுமுடைய ஒருவர் அவ்வறையில் நுழைந்தார். அவருடைய கருப்பு உடைகளைப்பார்த்தால் அவர் ஒரு டாக்டர் என்றுதெரிந்தது. அவரை ஒருமுறை பார்த்தாலே அவரது கெட்டகுணங்களை அறிந்துகொண்டுவிடலாம்.

அவர் அம்மாதர்களிடம், "உள்ளே செல்லுங்கள்; நான் உங்களைச் சொற்பநேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்," என்று சொல்லிக்கொண்டே அவர்களுடன் இருந்தவளும், கதவைத்திறந்தவளுமான கிழவியைவெளியே போகும்படி உத்தரவிட்டார். அக்கிழவியும் வெளிச்சென்றதும், அவ்வறையில் மற்றொரு விளக்கை ஏற்றிவைக்க அந்த டாக்டர் முயலுகையில் இராஜம்மாள் திடீரென்று, "ஐயா; வேண்டாம்; நான் முன்பு உம்மைப்பார்த்துப் பேசியபோதே

நான் ஒருமாதை இன்றிரவு அழைத்துக்கொண்டு வந்தால் அப்போது இந்த அறையில் மங்கலான சிறு வெளிச்சம் தான் இருக்கவேண்டுமென்று கூறவில்லையா ?" என்று கேட்டாள்.

அதற்கு டாக்டர். மணவாளன், "நான் தங்களிஷ்டப் படியே செய்துவைக்கவில்லையா? இப்போது விளக்கேற்ற முயற்சித்ததெல்லாம் உங்களுடன் வந்திருக்கும் அவ்வம்மை யார் இங்குள்ள சிறுவெளிச்சத்தைக்கண்டு பயந்தால் என்ன செய்வதென்னும் எண்ணத்துடனேயே யன்றி வேறில்லை," என்றார். அதைக்கேட்ட இராஜம்மாள், "அப்படியானால் உமது நல்லெண்ணத்துக்காக உமக்கு வந்தனம்; ஆயினும் விளக்கு அவசியமில்லை," என்றாள்.

அப்போதுதான் இரங்கம்மாள், அந்த அறையில் மங்கலான வெளிச்சமுடைய விளக்கு இராஜம்மாளின் ஏற்பாட்டின்படியே வைக்கப்பட்டிருந்ததென்றும், அங்கே வந்திருக்கும் தான் யார் என்று டாக்டர் தெரிந்துகொண்டுவிடலாகாதென்னும் எண்ணத்தாலேயே, அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் அறிந்துகொண்டாள்.

டாக்டர் மணவாளன், இரங்கம்மாளைச் சுட்டிக்காட்டி, "இவர்தான் நீங்கள் சொன்னமாதோ" என்று இராஜம்மாளைக்கேட்டார். அதற்கவள், "ஆம்; இவள்தான்; எனது சினேகிதியாகிய மாது. இவள் நாம் இருவரும் இவள்விஷயத்தில் எப்படிப்பட்ட ஒழுங்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோமென்பதை அறியமிக ஆவலுடையவளாய் இருக்கின்றாள்", என்றாள். அதற்கு அவர், "என்னிடம் சிகிச்சை செய்துகொள்ளப்போகும் ஒருவருடன் அறிமுகமானதுபற்றி மிகச் சந்தோஷம். ஆயினும் அவருடையபெயரும் தெரியவில்லை; அவர் யாரென்று பார்க்கவும் முடியவில்லையே ?" என்றார்.

அப்போது இராஜம்மாள் கூறியதாவது:—அது இரண்டும் நமது ஒப்பந்தம்தானே. இன்னும் மற்ற நிபந்தனைகளை இதோ என் சினேகிதியும் தெரிந்து கொள்ளும்பொருட்டு அவள் முன்னிலையிலேயே சொல்லிவிடுகின்றேன். அதாவது இம் மாது பிரசவிக்கும் நேரம் வரும்போது நீர் உடனே தங்கு தடை சொல்லாமல் சில நிமிஷநேரத்துக்குள் அழைத்துச் செல்லும் இடத்துக்கு வரவேண்டும். இங்கிருந்து உம் முடைய கண்களைக்கட்டியே அழைத்துப்போவோம். நீர் இம்மாதின் அறையில் இருந்து பிரசவத்தைக்கவனிக்கும் போதும் கட்டுண்ட கண்களுடனேயே இருக்கவேண்டும். நீர் எங்குவந்தீர்? யாருக்குச் சிகிச்சை செய்தீர் என்பதை அறிந்துகொள்ளச் சிறிதும் முயலலாகாது. பிறகு குழந்தை பிறந்ததும் அது உயிருடன் இருக்குமாயின் அதை நீரே கொண்டுவந்து உமது மூலம் யாரேனும் தக்கவர்களிடம் அக்குழந்தையைக் கொடுத்து அதை அவர்கள் சௌகரிய மாக வளர்க்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அக்குழந் தையை வளர்ப்பதற்காக அவர்களுக்கு வருஷவாரி உமது மூலம் ஐம்பதுபவுன் கொடுக்கப்படும். உம்மிடம் முன்னரே ஐம்பதுபவுன் உமது சிரமத்துக்கென அட்வான்சு கொடுக் கப்பட்டிருக்கிறது. மீதி தொகை உம்முடைய வேலை முடி யும்போது கொடுக்கப்படும்.

இதையெல்லாம் கேட்டிக்கொண்டிருந்த டாக்டர் தனக் குக்கிடைக்கும் பணத்தை உத்தேசித்து அந்த நிபந்தனைகளை யெல்லாம் அப்படியே ஒப்புக்கொள்வதாகச் சொன்ன துடன், "இந்த ஏற்பாடுகளைக்கேட்டு இப்போது என்னிடம் அறிமுகமான இம்மாதும் திருப்தியடைவாரென்றே நினைக் கிறேன்" என்று கூறிக்கொண்டே இரங்கம்மாளை உற்று நோக்கினன். ஆனல் அவளுக்கு டாக்டருடைய விஷயங்க

ளொன்றும் பிடிக்கவேயில்லை. எனினும் அவள் பதில் கூற வாய் திறக்குமுன் திடீரென்று அறைக்கு முன்பிருந்த ஹாலிலிருந்து மணியடிக்கும் சத்தம் கேட்டது. இதைக்கேட்டதும் டாக்டர் மிரண்டுபோய் புத்திதடுமாறியவராய் இன்னது தான் செய்வதெனத் தோன்றாமல் சற்றுநேரம் திகைத்துப் பிறகு சமாளித்துக்கொண்டு, "சொற்பநேரம் வெளியில்போய் வருவதற்காக மன்னியுங்கள்" என்று கூறிக்கொண்டே வெளிச் சென்றார்.

அப்போது இரங்கம்மாள் மெல்லியகுரலில், "இதில் ஏதோ தவறு இருக்கிறது; அவருடைய நடத்தையொன்றும் எனக்குப் பிடிக்கவில்லை," என்று கூறினாள். அதற்கு இராஜம்மாள், "அப்படி யொன்றுமில்லை; நமது நிபந்தனைகளை யெல்லாம் அவர் ஒப்புக்கொண்டதாலேயே அவர் நல்லவராகவே யிருக்கவேண்டுமென்று தெரியவில்லையா? நம்மைப் போல் வேறு எவரேனும் வைத்திய சிகிச்சைக்காக வந்திருப்பார்கள்," என்றாள்.

இரங்கம்மாளும், "வெளியில் யாரோபேசும் சத்தம் கேட்கிறது. டாக்டர் பீதியடைந்து வெளியில் சென்றதைப் பார்த்தால் அவர் எதிர்பாராதவர்கள் வந்து விட்டதாகவே தெரிகிறது," என்று கூறிக்கொண்டே வெளியில் என்ன நடக்கிறதெனத் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆர்வமேலீட்டால் அறையின் கதவிலுள்ள சிறுசந்தின் வழியாகப் பார்த்தாள். அப்போது இராஜம்மாளுக்கும் அச்சம் தோன்றியதால் அவளும் இரங்கம்மாளுடன் சேர்ந்துகொண்டு வெளியில் நடப்பதைக்கவனித்தாள். அம்மாதர்களிருவரும் மூச்சும்விடாமல் மிகக்கவனத்துடன் அவர்கள் என்னபேசுகிறார்கள் என்பதையறியப் பிரயாசைப்பட்டனர்.

தன்வீட்டு ஹாலில் அப்போது வந்துநின்றிருந்த வெறியன் என்பவனைக்கண்டு, "ஏது; இன்று நீங்கள் முன்னோரத்திலேயே வந்துவிட்டீர்கள்," என்று மிகமெல்லிய குரலுடன் கூறினனாயினும் அது அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த இருமாதர்களுக்கும் கேட்டுவிட்டது. வெறியன் உரத்தகுரலுடன், "எங்கள் இஷ்டப்படி நாங்கள் வரமுடியாது; எப்போது பிணம் அகப்படுகிறதோ அப்போது உடனே வந்துவிட வேண்டியதுதானே?" என்று கூறிய போது டாக்டர், "மெதுவாகப்பேசு, அறையில் என்னிடம் சிகிச்சைக்கு வந்திருக்கிறவர்கள் இருக்கிறார்கள்" என்றுகூறினன். உடனே வெளியில் இருந்த தொப்பனும் தொம்பனும் சேர்ந்து அவர்கள் கொண்டுவந்திருந்த பிரேதத்தை உள்ளே கொண்டுவந்து போட்டார்கள். அது விழுந்த சத்தத்தைக் கேட்ட இராஜம்மாளும் இரங்கம்மாளும் அது ஒரு பிரேதமென்றே தெரிந்துகொண்டார்கள். எனவே அவர்களுடைய தேகம் முழுதும் அச்சத்தால் நடுநடுங்கியது.

பிரேதத்தை உள்ளே கொண்டுவந்து போட்டதும் வெறியன் தன் நண்பர்களாகிய தொப்பனையும் தொம்பனையும் பார்த்து, "நீங்கள்போய்ச் சேருங்கள்; நான் டாக்டர் கொடுக்கும் சன்மானத்தை வாங்கிக்கொண்டு அரைமணி நேரத்தில் நாம் வழக்கமாய்ச் சந்திக்குமிடத்தில் வந்து சேர்கிறேன்," என்றுசொல்லி அனுப்பிவிட்டான். அப்போது தெருக்கதவு திறந்து மூடப்பட்டதும் அறையிலிருந்த மாதர்களுக்கு நன்குகேட்டது.

அப்போது டாக்டர், "ஆகட்டும், அவசரமாகவேலையை முடி; இந்தவழியைச் சுத்தப்படுத்துவோம். நான் போக வேண்டும். இல்லாவிட்டால் அறையிலிருப்பவர்கள் ஏதே

னும் நினைப்பார்கள்," என்றார். அச்சமயம் அறையிலிருந்த மாதர்களும் மிகக் கவனத்துடன் வெளியில்நடப்பதைக் கவனித்துவந்தார்கள். வெளியில் ஏதோ ஒருகனமான பதார்த்தமொன்றை இழுக்கும் சத்தம்கேட்டது. இதைக்கேட்டு இராஜம்மாளும் இரங்கம்மாளும் திடுக்கிட்டுப்போனார்கள். அச்சத்தால் அவர்கள் தங்கள் ஆசனங்களில் உட்கார்ந்துகொண்டுவிட்டார்கள். அச்சமயம் இரங்கம்மாள், "ஐயோ, கடவுளே! இதென்ன ஆபத்து; எனக்கு மிகவும் அச்சமாயிருக்கிறதே," என்றாள். இராஜம்மாளும் பயத்துடன் தேகம் நடுங்க, "ஆம், ஏதோ பயங்கரமாகத்தான் இருக்கிறது. எனினும் நாங்கள் வெளியில்நடந்த விஷயங்களொன்றும் அறியாதவர்களைப்போல் தைரியமாக நடந்துகொள்ளவேண்டும். டாக்டர் திரும்பிவந்தநிமிஷமே நாம் போய்விடுவோம். பயப்படாதே" என்று தைரியங்கூறினாள்.

இவ்வாறு ராஜம்மாள் பேசிமுடிக்கு முன் டாக்டர் மணவாளனும் அறையில் புகுந்தார். உடனே அவர்களை உற்றுப்பார்த்து அவர்கள் தங்கள் இடங்களைவிட்டு எழுந்தார்களா? அல்லது ஏதேனும் அறிந்துகொண்டார்களா? என்று கவனிக்க விரும்பியும் எதையும் தெரிந்துகொள்ள முடியாததால் ஒருவாறு சந்தோஷப்பட்டார். அப்போது, "உங்களை விட்டுவிட்டு நான் இவ்வளவுநேரம் வெளியில் சென்று வந்ததற்காக மன்னிக்கவும். நான் சில தின்பண்டங்களை உங்களுக்காகக் கொண்டுவரும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் சிறிது அருந்தவேண்டும்," என்றுடாக்டர் கூறினார்.

அப்போது இராஜம்மாள் ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு, "ஐயா, உமக்கு வந்தனம். நாங்கள் விரைவில் போகவேண்டுமாதலால் சிற்றுண்டியருந்த சாவகாசமில்லை. நமக்குள் ஏற்பாடுகளெல்லாம் முடிந்துவிட்டபடியால் அதன்

படி நடந்துகொள்வீர் என நம்புகிறேன்," எனக்கூறிக் கொண்டே எழுந்தாள். டாக்டரும் அவர்களுக்கு வெளிச் சத்தைக் காட்டுவதாகச் சொல்லிக்கொண்டு அந்தச்சிறு விளக்கை யெடுத்துக்கொண்டு அவர்களுக்கு முன் வழிகாட் டிக்கொண்டு போனார். பின்னால் சென்ற மாதர்களிருவரும் அச்சிறு வெளிச்சத்தின் உதவியாலேயே ஹாலின் ஒரு புறத் தில் தள்ளப்பட்ட அது என்ன என்று கவனித்தார்கள். ஏதோ ஒரு ஈரமான பதார்த்தம் ஹாலின் கதவினருகில் போடப்பட்டு அங்கிருந்து பிறகு இழுக்கப்பட்டுப்போன தாகத் தெரிந்தது. இரங்கம்மாள் அச்சத்தால் தடுமாறிக் கீழேவிழுபவள் போலானாள். ஆகவே இராஜம்மாள் தன் கையைக்கொடுத்துப் பிடித்துக்கொண்டாள். உடனே தெருக் கதவும் திறக்கப்பட்டது. மாதர்களிருவரும் டாக்டருக்கு வந்தனம் செலுத்திவிட்டு அனுமதி பெற்று முன்பு வந்த இருட்டுசந்தின் வழியாகவே செல்லப்புறப்பட்டனர்.

பிரேதத்தின் நாற்றத்தையுடைய டாக்டரின் வீட்டை விட்டு வெளியேறியதில் அம்மாதர்களிருவரும் சந்தோஷ மும் தைரியமும் அடைந்தவர்களாய் இரத்தினபுரி இளைய ராணி தங்கியிருக்கும் அம்மாளிகையை நோக்கி மிக விரை வாக நடக்க ஆரம்பித்தார்கள். அவ்வளவு விரைவாகச் சென் றதால் வழியில் அவர்கள் எதையும் பேசவும் முடியவில்லை.

---

## 102 - வது அத்தியாயம்

மேற்கூறிய விஷயங்கள் நடந்த ஒரு வாரத்துக்குப் பிறகு ஒருநாள் இரவு பதினொருமணிக்குமேல் அதே மாளிகையைச்சேர்ந்த நந்தவனத்தில் நடந்தவிஷயத்தை இப்போது நாம் கவனிப்போம். அங்கே ஒரு தனியான இடத்தில் மரகதவல்லியின் புத்திரிகளில் கடைசியானவளான ஜானகி நடந்துசென்று அந்த நந்தவனத்தில் ஒரு கோடியிலுள்ள கல்லால் செய்யப்பட்ட பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, "அவர் வருவதாகச் சொன்ன வேளை இப்போதுதான் நெருங்கி வருகிறது; நான்மட்டும் ஏன் இவ்வளவு முன்னதாக வரவேண்டும். இதற்கு நான் அவரை மிக்க நேசிப்பதே காரணமாகும். ஆ! என்ன அழகான மனிதர்! உண்மையில் அவர் அழகுவாய்ந்தவரே" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

தன் இருசகோதரிகளைப்போலவே அவளும் காமாந்தகாரத்தில் மூழ்கியவளாய் இருந்ததால் அவள் மனமெல்லாம்தான் காதலித்த அந்த ஆடவனுடைய கரத்தில் சாய்ந்துகொண்டு தான் இனி அனுபவிக்கப்போகும் இன்பங்களைப் பற்றியே அதிகம் நினைக்க ஆரம்பித்துவிட்டபடியால் அவளுடைய தேகம் மிக அழகாக இருப்பதாகத் தோன்றியது. அப்போது அவள், "இப்போது அவர் வரக்கூடாதா?" என்று நினைத்தாள். இவ்வாறு அவள் நினைத்தநிமிஷமே யாரோ ஒருவர் நந்தவனத்தின் மதில்சுவற்றிற்கு வெளியில் மதிலைநோக்கி நடந்துவரும் சத்தம்கேட்டது. உடனே அவள்

அந்த பெஞ்சியின்மீது நின்று வெளியில்பார்த்ததில் தான் யாரைக்கோரினளோ அவரே நடந்துவருவதைக் கண்டு களித்தாள். வந்தவனும் மதில்சுவருக்கு வெளியிலிருந்த ஒரு மரத்தின்கிளைமீது ஏறி நின்றுகொண்டு உள்ளேபார்த்தான். ஜானகியும் பெஞ்சியின்மீது ஏறிக்கொண்டிருந்தபடியால் இருவருடைய மேற்பாதி தேகங்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்படச் சௌகரியமாயிருந்ததால் அவர்களிருவரும் ஒருவர் வெளியிலும் ஒருவர் உள்ளேயுமாயிருக்கையிலேயே காதல் மிகுதியால் பரஸ்பரம் கணக்கிலடங்காத முத்தமிட்டுக்கொண்டனர்.

"ஆ, அன்புள்ள ஜானகி! எவ்வளவு இன்பமாக இருக்கிறது" என்றான் அந்த ஆடவன். அவளும், "நானும் அவ்வாறே இன்பங்காண்கின்றேன்" என்றாள். இதுதான் அவர்களிருவரும் இப்போது சந்தித்ததில் முதல் முதல் பேசியதாகும். ஜானகியின் காதலனாகிய குமாரவேல் பிரபு, "நான் இந்தமதில் சுவர்மீது ஏறி உள்ளே குதித்து உன்னுடன் சேர்ந்துகொள்ளலாகாதோ?" என்று மிக ஆவலுடன் கேட்டான். அவள் அவனைப்பார்த்த பார்வையானது அவனுடைய வாயினின்றும் சொற்கள் வெளியாகு முன், "அப்படியே ஏறி உள்ளே வரலாம்" என்று தெரிவிக்கக் கூடியதாய் இருந்தது. குமாரவேல் பிரபுவும் அப்படியே தாவிக்குதித்துச் சென்று நந்தவனத்தில் ஜானகியின் பக்கத்தில் அந்தப் பெஞ்சியின் மீது உட்கார்ந்ததும் அவளைத்தன் கரத்தில் இழுத்துக்கொண்டு அவனுக்கிருந்த காதலின் மேலீட்டால் அவளுடைய கன்னங்களிலும், நெற்றியிலும், மார்பிலும் சரமாரியாக முத்தமிட்டான்.

ஜானகி:—அன்புள்ள காதல! நேற்று நாம் இருவரும்பிரியும் போது நீ என்னுடன் மிக அவசரமாகவும் முக்கியமாக

வும் பேசவேண்டிய விஷயம் எதுவோ இருப்பதாகக் கூறினாய். அப்போதே சொல்லும்படி நான் கேட்டுக் கொண்டிருந்தும் அதை இன்று சந்திக்கும் இச்சமயத் தில் கூறுவதாகச் சொன்னாயல்லவா? அதை இப்போது உடனே தெரிவி.

குமாரவேல்:—உண்மைதான், நாம் இப்போது அதைப்பற் றிப்பேசுவோம். திடீரென்று தெரியப்படுத்துவதை விட அதை நீ கேட்பதற்குத் தயாராக இருக்கும்போது அதைத்தெரியப் படுத்தவேண்டு மென்னும் எண்ணத் தாலேயே இன்று அறிவிப்பதாகச் சொன்னேன்.

ஜானகி:—அப்படியானால் அதைச்சொல்ல ஆரம்பித்துவிடும். எதோ நல்ல சங்கதிபோலவே தோன்றுகிறது.

குமார:—நீ அவ்வாறு நினைப்பாய் என்று நான் நினைக்க வில்லை. எப்படியிருப்பினும் சொல்கிறேன் கவனித் துக் கேள்.

ஜானகி:—அதென்ன? அப்படிப்பட்ட விசேஷ சமாசாரம். இந்த அன்புமயமான நம்விஷயத்தை நான் மறக்க வேண்டியதாகுமோ?

குமார:—இல்லை, இல்லை; நீ விரும்பினால் இந்த விஷயத்தை உண்மையானதும் சாசுவதமானது மாக்கவே நான் அதைச் சொல்லுகிறேன்.

ஜானகி:—"அப்படியானால் எனக்கு மிக சந்தோஷம்" என்று சொல்லிக்கொண்டே தன் காதலனாகிய அவனிட மிருந்து சரசசல்லாபங்களை எதிர்பார்ப்பவளே போல் காம உணர்ச்சியின் அதிகத்தால் அவனுடைய கரத்தில் நன்றாகச்சாய்ந்து காமாக்கினியால் தகித்துக்கொண்டி ருந்த அவள் பார்வையை அவன்மீது வீசினாள்.

குமார:—நான் உன்னை முதன் முதலில் சந்தித்தது முதல் இப்போது இரண்டு மாதகாலமாய் விட்டது. நீ இளைய ராணியின் கூட்டத்தில் சேர்ந்திருப்பதை நான் கண்டது முதல் உன்மீது மோகித்து உனது அன்பைப்பெற முயற்சித்தேன். நீ முதலில் என்னை வெறுப்பவளைப் போல் நடந்துகொண்டாலும் பிறகு வரவர இடங் கொடுக்க ஆரம்பித்துவிட்டாய்.

ஜானகி:—ஆம்; நீ மிக அழகுள்ளவன் எனக்கண்டதால் அவ்வாறு சம்மதித்தேன். உன்னைப் பார்த்ததுமுதலே எனக்கும் உன்மீது ஆசை ஏற்பட்டதென்றாலும் அந் நியராகிய ஒருவருக்கு எப்படி திடீரென்று இடங் கொடுத்துவிடுவதென நினைத்தே சொற்பகாலம் சிந்தித் தேன். பிறகு நீ இன்னானென்று தெரிந்து கொண்ட பிறகு உன் இஷ்டப்படியே நான் நடந்துகொள்ளவில் லையா?

குமார:—இல்லை. நான் உன்மீது குறைகூறவில்லையே? ஆயி னும் நான் இன்னானென்று உனக்குத் தெரிவித்ததும் என் சம்பந்தமான சிலகஷ்டங்களும் உனக்குத் தோன் றிற்றல்லவா?

ஜானகி:—ஓஹோ! உனக்கு விவாகமாய் இருப்பதையும், உன் மனைவி உயிருடன் இருப்பதையும்பற்றிய பிரஸ் தாபமோ? ஆம்; விவாகமான நீ விவாகமாகாத கன்னிகையாகிய என்னுடன் தைரியமாகக் காதல் விஷ யங்களை எப்படிப்பேசலாம். அப்படியிருந்தும் நான் உன் மீது கோபித்துக்கொண்டேனா? அல்லது உன்னுடன் பேசாமல் ஓடிவிட்டேனா? அவ்வாறுசெய்யாமல் இருந்த தற்குக்காரணம் எனக்கு உன்மீதுள்ள அளவிலாக்காத லேயாகும். இவ்வாறெல்லாம் உன் மோகத்தில் சிக்கிக்

கொண்டு உனக்கு இடங்கொடுத்ததற்காக நீ என்னைப் பற்றி என்னநினைக்கிறாய்?

குமார:—நான் நினைப்பதென்ன? எனக்கும் உன்னிடம் அளவிலாபற்று இருப்பதனால்தான் நீயும் என்னை அவ்வாறு அளவுகடந்து நேசிப்பதுடன் எனக்காக எவ்வகைத் தியாகமும் செய்யத்தயாரா யிருக்கிறாய். என்னை நீ நேசிப்பதால், ஒருவனுக்கு மனைவி என்னும்பெயர் உனக்கு இல்லாமற்போகிறது. மேலும் பிறகு வேறு யாரை நீ காதலித்தபோதிலும் அவரை விவாகம்செய்து கொள்ள முடியாமற்போகிறது. இவ்வளவு சிரமங்களையும் பொறுத்துக்கொண்டு என்னை நீ நேசிப்பதால் நானும் உனக்காக எதையும் தியாகம்செய்யவும், அவசியமானால் என் மனைவியையே துறக்கவும் வேண்டியவனாயிருக்கிறேன். எனினும் உனக்காக நான் எதையும் செய்யத்தயார். ஆகவே நாம் பரஸ்பரம் உண்மையாகவே காதலிப்பதாயிருந்தால் இருவரும் உலகத்தையே துறக்கவேண்டியதுதான்.

இதைக்கேட்ட ஜானகி, "ஆ; இவ்வினிய வார்த்தைகள் எனக்கு எவ்வளவு சந்தோஷத்தை ஊட்டுகின்றன! உனக்காக நான் இவ்வுலக இன்பங்களையெல்லாம் தியாகம்செய்யவும் தயாராயிருக்கிறேன் என்று கூறிக்கொண்டே குமாரவேல்பிரபு அவளிடமிருந்து அப்போதே எல்லாவகை இன்பங்களையும் பெறலாமென்று அனுமதிப்பவளேபோல் இன்னும் அதிகமாக அவன் கரத்தில்சாய்ந்தாள்.

குமார:—அவளது மனோநிலையை யறிந்து அவளைத் திருப்தி செய்யும் பொருட்டுப் பலவகை சரசசல்லாபங்களைச் செய்துகொண்டே, "இப்போது நான் மிகவும் சந்

சந்தோஷமடைகின்றேன். எனினும் நீ இவ்வாறு என் சொத்தாக ஆகிவிடுவதால் நீ உன் தாய், சகோதரிகள், பந்துமித்திரர் ஆகிய அனைவரையும் துறக்கவேண்டிய அவசியம் எற்படுமே; அதற்கு நீ உடன்படுவாயோ என அஞ்சுகிறேன்,'' என்றான்.

ஜானகி:—ஐயா, நீ சொல்வதென்றும் எனக்கு விளங்கவில்லையே! நீ கூறுவது இன்னதென்பதைப்பற்றி நன்றாக விவரித்துச்சொல். அது தெரியாமல் மிகவும் துக்கமாக இருக்கிறது.

குமார:—அன்புள்ள கண்மணி! நாம் இருவரும் ஒருவருக்காக ஒருவர் பூரணதியாகம் செய்யவேண்டும் என்பதே, அதாவது நீ இங்குள்ள உன் சகோதரிகளையும் பந்துமித்திரர்களையும், உன் சாமான்களையும் விட்டுவிட்டு என்னுடன் வந்துவிடவேண்டும் என்பதே. அவ்வாறு வந்தால்தான் நீ என் சொந்த சொத்து ஆகலாம்.

ஜானகி:—என்ன உன் மனைவியைப்போல் உன்னுடன் பகிரங்கமாக வாழவேண்டுமென்கிறாயா? என்று ஆச்சர்யத்துடனும் கோபமின்றி நிதானமாகவும் கேட்டாள்.

அதற்கு குமாரவேல், "ஆம்; நிச்சயமாக அப்படியே செய்யவேண்டும். நான் உன்னை உள்ளன்புடன் நேசிப்பதாக அறிவித்திருக்கிறேனல்லவா? அதற்காக நான் படும் கஷ்டங்கள் உனக்குத்தெரியுமா? உன்மீதுள்ள அளவிலா அன்பின் காரணமாக உன்னைக்கண்டது முதல் உன் பின்னாலேயே ஊர் ஊராய்த்திரிவதுடன் நான் தங்குமிடங்களிலெல்லாம் நான் இன்னவன் என்று மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமலிருக்கும் பொருட்டு மாறுபெயருடனும் பல கஷ்டங்களிடையிலும் முன்பின் தெரியாத ஊர்களில் வாழ்க்

கையை நடத்தவேண்டி யிருக்கிறது. இவ்வளவு கஷ்டங்களிடையிலும் உன்னைத் தனியாகக்காண விரும்பி நீ செல்லுமிடங்களுக்கெல்லாம் உன்பின் ஓடுவதும் சிற்சில சமயங்களில் உன்னைக்கண்டு களிப்பதும் பல சமயங்களில் உன்னைத் தனியே சந்திக்கமுடியாமல் ஏமாற்ற மடைவதுமாக என் வாழ்நாளைக் கழித்து வருகிறேன். இன்னும் எவ்வளவு காலம் தான் இப்படிக்கஷ்டப்பட முடியும்? இப்போதேனும் என் கஷ்டங்களுக்குத் தக்கபலன் கிடைக்குமா என ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்,'' என்று சொன்மாரி பொழிந்தான்.

ஜானகி:—ஓ; நீ எனக்காக அனுபவிக்கும் பலவகைக்கஷ்டங்களையும் நான் நன்கு அறிவேன். ஆயினும் நான் குறிப்பிட்ட வேளையில் உன்னைச்சந்திக்க முடியாமற் போனதற்கும் அல்லது சந்தித்துச்சொற்ப நேரத்துக்குள் திரும்பிச் சென்றதற்கும் நீ என்மீது வருத்தப்பட முடியாதல்லவா? நான் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்திருப்பவள் தானே?

குமார:—அன்பே! உன்னை நான் ஒருகாலும் குறைகூறவே மாட்டேன். ஆனால் நான் கூறுவது யாதெனின், இப்போது நான் அனுபவிப்பதுபோன்ற கஷ்டமான வாழ்க்கையை இன்னும் தொடர்ந்து அனுபவிக்கமுடியாதாதலால் நாம் விரைவில் ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டுமென்பதே.

ஜானகி:—என்ன முடிவு?

குமார:—என்ன முடிவா? நான் முன்னமே கூறினேனே நீ எனக்காக உன்வேலையை ராஜிநாமா செய்துவிட்டு இங்குள்ள உன் சொத்து சுதந்தாங்களையும், பந்துமித்திரர்

களையும் விட்டு உன்னுடன் தேசாந்தரம் வந்துவிட வேண்டியதுதான்.

இதைக்கேட்டதும் ஜானகிக்கு சிறிது மனவருத்தமுண்டாயிற்றென்றாலும் உண்மையிலேயே அவள் குமாரவேல் பிரபுவை உள்ளன்புடன் நேசித்தபடியால் அன்புடனேயே, "இல்லை; இல்லை. அவ்வாறு செய்யமுடியாது. என் உத்தியோகத்தை நான் விடமுடியாது. உனக்காக நான் அதைச்செய்து விடுவேன் என்றாலும் வேலையை விடாமல் விருப்பதற்குரிய காரணங்கள் பல இருக்கின்றன.

குமார:—அப்படியானால் நீ என்னை, நான் உன்னை நேசிப்பதுபோல் அவ்வளவு அதிகமாக நேசிக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே உனக்கு இதோ இறுதி வந்தனம். எனக்கூறிக்கொண்டே உட்கார்ந்திருந்த இடத்தினின்றும் எழுந்து அவ்வழகிய கன்னிகையின் கன்னத்தில் ஒரு முத்தமிட்டுவிட்டு மதில்சுவர் மீதுதாவினான். மறுபடியும் "இறுதிவந்தனம்" என்று சொல்லியவண்ணம் நடக்கலாயினான்.

ஆனால் ஜானகிக்குக் காமம் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்துவிட்டது. எப்படியாவது தன் காதலனைமீண்டும் அழைத்து அவனைத் தழுவிக்கொண்டு அவன் வசமாய் விட வேண்டுமென்னும் ஆவல் எல்லையை மீறிவிட்டது. அவள் தேகமெல்லாம் மின்சார உணர்ச்சி தோன்றியதுபோல் நடுக்கமெடுத்தது. ஆதலின் அவள் தான் உட்கார்ந்திருந்த பெஞ்சியின் மீது ஏறி நின்று தன் அழகிய வெண்மையான வாசனையோடுங்கூடிய கைக்குட்டையை வீசி குமாரவேல் பிரபுவை மீண்டும் திரும்பிவரும்படி சமிக்ஞை செய்தாள். அவனும் திரும்பிப்பார்த்து அவள் அழைப்பதை அறிந்து திரும்பி வரலானான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் முன்

போல் தோட்டத்தின் மதிலுக்கு அண்டினாற்போல் வெளியி லிருந்த மரத்தின்மீது ஏறி நிற்கவும் இருவரும், ஒருவர் உள் ளும் ஒருவர் புறமும் இருந்தபடியே கைகோத்துக்கொண்டு ஆவலுடன் முத்தமிட்டுக் கொண்டனர்.

அப்போது ஜானகி, "அன்பா! இவ்வாறு நீ என்னை நட்டாற்றில் விட்டுவிட்டது போல் விட்டுப் போகலாமா?" என்று மெய்நடுங்கக் கேட்டாள்.

அதற்கு அவன், "நான் இப்போது சொன்னதை மீண் டும் திருப்பிச்சொல்ல வேண்டுமா? நீ என்னை நேசிப்பது உண்மையானால் என்னுடன் வந்துவிட வேண்டும். இனியும் என்னால் இப்படிப்பட்ட வாழ்க்கை வாழமுடியாது. முன் பின் தெரியாத இவ்வூரில் பேர் மாறாட்டத்துடன் வாழ்க் கையை நடத்துவது எவ்வளவோ கஷ்டமாய் இருக்கிறது. ஆதலின் நீ என் சொந்த சொத்தாகப்போக வேண்டுமாயின் உடனே என்னுடன் புறப்பட்டு வரவேண்டியது தான்," என்று கூறிக்கொண்டே குமாரவேல்பிரபு ஜானகியின் கரத் தைப் பிடித்து தன் உதட்டில்வைத்து முத்தமிட்டான். அந்த சற்றுநேரத்துக்குள் ஜானகி ஆயிரக்கணக்கான எண் ணங்களைச் சிந்திக்கலாயினள்.

அப்போது இந்தக்காதலனிடம் தனக்குள்ள அன்பை யும் அவன்மூலம் பெற்றுவரும் இன்பங்களையும் துறப்பதா? அல்லது இரகசியமான காரியத்தை முடிப்பதற்காக இளைய ராணியினிடம் அமர்ந்திருக்கும் வேலையை விட்டுவிடுவதா? அல்லது காதலனையே விட்டுப்பிரிந்து சொற்பகாலம் மனக் கஷ்டப்பட்டாலும் பிறகு மறப்பதா? அல்லது தன் இச்சை யைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக இப்போது காதல னுடன் ஓடிப்போய்ப் பின்னால் பலவகையான துயரங்களைத் தாக்கூடிய வாழ்க்கையை நடத்துவதா என்று எண்ணத

எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணுனாள். இறுதியில் எத்தகைய முடிவுக்கும் இப்போதே வந்துவிடாமல் சிறிது காலந்தாழ்த்த வேண்டுமென்னும் முடிவுக்கு வந்தாள்.

அவள் வெகுநேரமாய்ப் பேசாதது கண்ட குமாரவேல் பிரபு, "என்ன ஜானகி! என்ன சொல்லப்போகிறாய்? உன் தீர்மானமென்ன ?" என்று கேட்டான்.

அதற்கவள், "அன்புள்ள கண்ணாளா! இருவரும் சிறிது விட்டுக் கொடுக்கவேண்டும். நான் உன்னுடைய சொத்து தான். உன் மனைவி, உன் காதலி, அல்லது நீ என்னை என்னவென்று அழைத்தாலும் எனக்குத்திருப்தியே. ஆனால் நீ எனக்கு ஒருமாதகால சாவகாசமாவது அளிக்கவேண்டும். நான் இதற்குள் இங்கே சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு உன்னுடன் புறப்படத் தயாராகலாம்," என்று கேட்டுக் கொண்டாள்.

குமார:—ஏற்பாடுகளா? என்ன ஏற்பாடு நீ செய்யவேண்டும். நீ இவ்வாறு என்னை நேசிக்கிறாய் என்பதை ஒருவரிடமும் சொல்லமாட்டாய் என்று தான் நான் நினைக்கிறேன்.

ஜானகி:—இல்லை ஒருகாலும் நம் காதல் விஷயத்தை ஒருவரிடமும் சொல்லமாட்டேன். ஆனால் நான் சொன்ன விஷயம் வேறு. அதைப்பிறகு தெரிவிக்கிறேன்.

குமார:—கண்மணி! எனக்கும் தெரியக்கூடாத ரகசியம் உன்னிடம் இருக்கிறதா? ஆம்; உன் முகக்குறியைப்பார்த்தாலே ஏதோ ரகசியம் இருப்பதுபோலத் தான் தெரிகிறது. இருக்கலாம், அதைக்கேட்பதற்கு எனக்கென்ன உரிமை இருக்கிறது? இருக்கட்டும்.உன் இஷ்டப்படியே

நான் இங்கு இருப்பதென்றால் கடைசியிலாவது உன் இரகசியத்தை என்னிடம் கூறுவாயா?

ஜானகி:—ஓ, கட்டாயம் சொல்வேன். இப்போது நீ எனக்கு எத்தகைய சந்தோஷத்தை யளித்தாய். இன்னும் ஒரு மாதகால சாவகாசம் எனக்குக் கொடுக்கிறாயல்லவா?, என்று கூறிக்கொண்டே அவனது கரத்தை எடுத்துத் தன் உதட்டில் வைத்தழுத்தினாள்.

அப்போது குமாரவேல், "சரி; அப்படியே ஆகட்டும். நாம் வெளியேறுவதற்கிடையில் நமது அன்பின் முதிர்ச்சியின் பயனாக நாம் கணவன் மனைவி என்னும் முறையில் இன்பத்தை அனுபவிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை எனக்குத் தரமாட்டாயா?" என்றான்.

அதற்கு ஜானகி, தனது சகோதரி அம்புஜம் கர்னல் மாரப்பனிடம் கூறியதேபோல், குமாரவேல் பிரபுவிடம் அவன் அன்று இரவு வெகுநேரத்துக்குப்பிறகு யாரும் பார்க்காதபடி எப்படித் தன் அறைக்கு வரலாமென்பதை அறிவித்து விட்டுச் சென்றாள்.

## 103 - வது அத்தியாயம்

மறுநாள் விடியற்காலை குமாரவேல்பிரபு இளவரசி தங்கியிருக்கும் அம்மாளிகையினின்றும் வெளிப்பட்டு அத்தோட்டத்தில் புகுந்து கடைசியாய் மதிலின் அருகில் போடப்பட்டிருக்கும் கல் பெஞ்சியின்மீது ஏறித்தாவி வெளியில் குதித்தான். அப்போது தான் சூரியோதயம் ஆகும் சமயமாயிருந்ததால் கிழக்கு வானம் மிக அழகாகப் பல வர்ணங்களால் ஜ்வலித்துக் கொண்டிருந்தது. அந்த அழகைக்

காண அவன் கிழக்குப்பக்கமாகத் திரும்பிப்பார்த்தான். அப்போது அவன் முன்னாள் இரவுமுழுதும் தான் ஜானகியின் காத்தில் ஆனந்தமாகக் காலங்கழித்ததையும், அனுபவித்த இன்பங்களேயும் நினைத்து நினைத்து உள்ளம் மகிழலானன். அப்போது இளவரசி மாளிகையின் மதிலிலிருந்த கிழக்குப் புறவாயில் திறக்கப்பட்டதையும் அதிலிருந்து ஆடைகளால் உச்சிமுதல் உள்ளங்கால் வரை மறைத்துக்கொண்ட ஒருவர் வெளிப்பட்டதையும் கண்டான். கூர்ந்து கவனித்ததில் அவன் கர்னல்மாரப்பனு யிருக்கவேண்டுமெனத் தெரிந்தது. ஆனல் அவன் இப்போது இங்கு வரவேண்டிய அவசியமென்ன வென நினைத்து மற்றொருமுறை நோக்கினன். அப்போது இருவருடைய பார்வையும் பரஸ்பரம் சந்தித்தது. அச்சமயம் இருவரும் ஒருவரை யொருவர் இன்னுரென்று அறிந்து கொண்டனர். என்றாலும் பகிரங்கமாகக் கலந்துபேசத் தைரிய மின்றி என்னசெய்வதென்று ஒன்றும் தோன்றாமல் திகைக்கலாயினர்.

மேலும் குமாரவேல்பிரபு தன்னிடம் எவ்வளவு குற்ற மிருந்தபோதிலும் கர்னல் மாரப்பன், குமாரவேல் பிரபுவின் மனைவியின் காதலனுக இருந்ததாலும் அவளை மிரட்டி ஆறு யிரம் சவரன்களைப் பெற்றதாலும், மற்றும் அவனுடைய தீய குணங்கள் பலவற்றை அவன் வெறுத்ததாலும் கர்னல் மாரப்பனிடம் பகைமை கொண்டிருந்தான். இப்போது அவர்கள் சந்தித்த இடம் அந்நியதேசமா யிருந்தபடியாலும், இளவரசியின் மாளிகைக்கு அவன் எப்படிவந்தான் என்னும் மர்மத்தை யறியவேண்டுமென்னும் ஆவல் அதிகமா யிருந்த தாலும் சும்மா இருந்தானே யன்றி அதுவே இரத்னபுரியாக இருந்திருந்தால் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத் துடன் வேண்டுமென்றே சண்டைக்கு இழுத்திருப்பான்.

ஆகவே தான் யாரால் எதற்காக அனுப்பப்பட்டானோ அது போலவே அவனும் அனுப்பப்பட்டிருப்பானோ என்று சந்தேகித்துச் சிறிதும் தாமதமின்றிக் கர்னல்மாரப்பனை நோக்கி, "ஒருவரையொருவர் அறிந்து கொள்ளாதது போல் பாவனை செய்வதில் பயனில்லை," என்றான்.

மாரப்பன்:—சரி, அப்படியானால் எனக்குத்தோன்றிய சந்தேகமொன்று நிலையாக உறுதியாகிறது.

குமாரவேல்:—என்ன, அப்படிப்பட்ட சந்தேகம், சொல் பார்ப்போம்.

மாரப்:—இந்த மாளிகையினருகில் நீ வட்டமிட்டுக் கொண்டிருப்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

குமார:—நீயும் இவ்வாறே வட்டமிடுவதை நான் பார்த்திருக்கிறேனே. ஆகவே நாம் இருவரும் கலந்து பேசி சில விஷயங்களைப் பரஸ்பரம் தெளிவு படுத்திக்கொள்வது நலம். சூரியோதயமாய் விட்டதால் இனியும் இங்கு தாமதிக்கக்கூடாது. நீயும் பரிதிபுரம் நோக்கித்தானே வருகிறாய்?

கர்னல்மாரப்பன், "ஆம்" என்று சொல்லிக்கொண்டே தான் மாளிகையினின்றும் வெளிவந்த சிறு வாயிலைக்கவனத்துடனும் கவலையுடனும் பார்த்தான்.

அப்போது குமாரவேல் மாரப்பனின் குழப்பத்தின் காரணத்தை அறிந்துகொண்டு, "ஏன் கலக்கமடைகிறாய், அதோ உன் கையில் சிறு சாவி இருக்கிறதே. உனக்கும் அதை உன்னிடம் கொடுத்த மாதுக்கும் என்னசங்கேதமோ அதன்படி அச்சாவியை வைத்துவிடு. என்னைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். வா போவோம்" என்றான்.

அதைக் கேட்டதும் கர்னல் மாரப்பன் சிரித்துக் கொண்டே, "நீ நேற்று இரவு அனுபவித்த இன்பம் காரண மாக நானும் அப்படித்தான் அனுபவித்தேன் என்று கருதி னாய் போலும்! நீயும் நான் வந்தவழியே வராவிட்டாலும் வேறுவழியாக வேனும் மாளிகையிலிருந்து வெளிப்பட் டிருக்கவேண்டும்," என்றான். அதற்குக் குமாரவேல், "சரி, சாவியை வைத்துவிட்டு வா; நாம் போவோம். பிறகு விவர மாகப் பேசிக்கொள்வோம்," என்று கூறவும் மாரப்பனும் சாவியை வைத்துவிட்டுப் புறப்பட்டான்.

அவர்கள் சிறிதுதூரம் நடந்துசென்ற பிறகு குமாரவேல் பிரபு, "நாம் இருவரும் இந்நேரத்தில் சேர்ந்து பரிதிபுரத்தில் நுழைந்தால் ஏதேனும் தகராறு ஏற்படும் அல்லவா? ஆதலின் நீ காலை எட்டு மணிக்குமேல் நான் தங்கியிருக்கும் இடத் துக்கு வந்தால் அங்கேயே காலை ஆகாரம் அருந்தலாம். அப்போது விவரம் பேசிக்கொள்வோம்," என்று கூறினான். அதற்குக் கர்னல்மாரப்பனும், "ஆமாம்; இங்கு போலீஸ் காரர்கள் மிக எச்சரிக்கையுடன் இருக்கின்றனர். ஆதலின் நாம் மிக ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும்," என்றான்.

குமாரவேல் பிரபு, 'ஆம், நான் மாறுபெயருடன் காலங் கழிப்பதால் மிக ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியிருக்கி றது," என்றான். கர்னல் மாரப்பன், "என் நிலைமையும் அது தான்," என்று கூறினான். அதற்கு குமாரவேல்பிரபு, "ஆத லின் நாம் போலீசாரின் சந்தேகத்துக் காளாகாதபடி நடந்து கொள்வதே நலம். பொய் பாஸ் போர்ட்களை வைத்திருப்ப வர்கள் விஷயத்தில் மிகக்கடுமையாக நடந்து கொள்கின்ற னர். நான் சுந்தரன் என்னும் மாறுபெயரால் இங்கு காலங் கழிக்கிறேன். இதோ என் விலாசம் அச்சடித்துள்ள கடிதம். நீ எட்டுமணிக்கு என்னை வந்து பார்," என்றான். கர்னல்

மாரப்பன், "அப்படியே ஆகட்டும்; உன்னுடைய ஆட்கள் நாராயணன் என்பவர் வந்திருக்கிறார் என்றால் அது என்னைத் தான் என்று தெரிந்துகொள்," என்று சொன்னான்.

பிறகு அவர்களிருவரும் பிரிந்து போனார்கள். அவ்வாறு பிரிந்த குமாரவேல்பிரபு பரிதிபுரத்தில் சென்று அதிக செல்வர்கள் வீடு போலில்லாத சாதாரண நடுத்தர நிலைமையிலுள்ளவர்கள் வீடுபோல் காணப்பட்ட ஒரு வீட்டின் கதவைத் தட்டினான். சிறிதுநேரம் அவன் காத்திருந்த பிறகு அவ்வீட்டைச் சேர்ந்த சுமார் பதினெட்டு வயதுடைய ஒரு அழகிய பெண் கதவைத்திறக்கவே அவன் இரவுமுழுதும் யாரோ ஒரு நோயாளி நண்பனுக்குத் துணைசெய்ய அங்கு இருந்ததாக முணுமுணுத்துக் கொண்டே கூரிய பார்வையுடன் அப்பெண்ணின் அழகைக் கவனித்தவண்ணம் பின்கட்டிலுள்ள தன் அறைக்குச் சென்றான். அந்த அறை மிகச் சிறிதாக இருந்தபோதிலும் சுத்தமாகவும் அழகாகவும் இருந்தது. அவன் அப்பெண்ணினிடம் எட்டுமணிக்கெல்லாம் காலை ஆகாரம் தயாரிக்கப்பட வேண்டுமென்றும், நாராயணன் என்னும் தன் நண்பர்வந்தால் அவரை உள்ளே அழைத்து வரவேண்டு மென்றும் சொல்லி யனுப்பிவிட்டுச் சுந்தரன் என்னும் மாறுபெயர் கொண்ட குமாரவேல்பிரபு தன் காலைக் கடன்களை முடிக்கலானான். இதற்கிடையில் அவன் கர்னல் மாரப்பன் வந்தால் அவனுடன் எப்படிப் பேசவேண்டும். எவ்வளவு விஷயத்தைத் தான் சொல்லலாம், எப்படி அவனிடமிருந்து விஷயத்தைக் கைப்பற்றுவது என்பதுபற்றியோசிக்கலானான்.

சரியாக எட்டுமணிக்கெல்லாம் கர்னல்மாரப்பன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் குமாரவேல் பிரபுவின் அறையில் நுழையும்போதே, "நீ, ஏன் இந்த சாதாரண வீட்டில் தங்கி

பிருக்கிருய் என்பதை அறிந்துகொண்டேன். ஆ, என்ன அழகு? பிரகாசமான கண்கள்; பவளம்போன்ற உதடுகள் முத்துப்போன்ற பற்கள், என்ன சிரிப்பு'' என்று கூறிய போது குமாரவேல்பிரபு, "அதெல்லாம் பேசாதே, அந்தப் பெண்ணுக்கு நமது பாஷையும் சிறிது தெரியும், வா; இங்கே உட்கார்ந்து கொள். எனக்கு இருப்பதுபோல் உனக்கும் பசி அதிகமாயிருந்தால் இதோ இந்தக் காலை ஆகாரத்தை வேண்டிய அளவு சாப்பிடு'' என்ருன்.

மாரப்பன்:—ஆம்; காலையில் நான் இவ்வளவுதூரம் நடந்தால் பசி அதிகமாகவே இருக்கிறது. இந்த வீடு எளிமையுடன் கூடியதாக இருந்தாலும் சுத்தமாகவும் அழகாகவும் இருக்கிறது.

குமார:—சரி, அதிருக்கட்டும். இப்போது நாம் நம்விஷயங்களைப்பற்றிச் சிறிது பேசுவோம்.

மாரப்பன்:—ஆம், பேசவேண்டியது அவசியமே. காலையில் நேர்ந்த சம்பவத்தால் இருவருக்கும் பரஸ்பரம் சந்தேகங்கள் அதிகமிருக்கின்றன. ஆதலின் அதைப் பேசித் தீர்த்துவிட வேண்டியதுதான்.

குமார:—ஆகவே நாம் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நம்பி எத்தகைய ஒளிமறைவுமின்றி நிஷ்கபடத்துடன் விஷயங்களைப் பேசவேண்டியது அவசியமல்லவா?

மாரப்பன்:—நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. காலையில் நேர்ந்த சம்பவத்தைப் பற்றிச் சொல்கிருயா?

குமார:—எல்லா விஷயத்திலுமே ஒளிமறைவின்றிப் பேசவேண்டும். காலையில் இளையராணியின் மாளிகையில் நடந்ததைப்பற்றி மட்டுமல்ல, இந்த பரிதிபுரத்தில் நாம்

என்ன செய்கிறோம் என்பதைப்பற்றியும் பேசவேண்டும்.

கர்னல்மாரப்பன் மிக ஜாக்கிரதையுடன் தன்னை இரத்தினபுரியினின்றும் அனுப்பியவர் தன் விஷயத்தில் சந்தேகங்கொண்டு சோதனை செய்வதற்காகக் குமாரவேல்பிரபு அனுப்பப் பட்டிருக்கிறானோ என நினைத்து, "அப்படியானால் நீ ஏதோ சந்தேகிக்கிறாய்போல் இருக்கிறதே" என்றான்.

குமார:—ஆம். சந்தேகிக்கிறேன். நாம் இருவரும் ஒருவராலேயே ஒரே விதமான வேலையைச் செய்து முடிக்கும் பொருட்டு நமக்குப் பரஸ்பரம் தெரியாமல் அனுப்பப் பட்டிருக்கிறோம் என நினைக்கிறேன்.

மாரப்:—நீ சொன்னபடியே நானும் நினைத்தேன். ஆதலின் நான் நினைத்ததையே இப்போது நீ கூறி விட்டாய்.

குமார:—ஆதலின் நாம் ஒருவரை யொருவர் நம்பி ஒளி மறைவில்லாமல் இரகசியங்களை யெல்லாம் வெளியிட்டுப் பேசலா மன்றோ?

மாரப்:—எனக்குத் தடையில்லை. ஆனால் நான் அவ்வாறு பேசுவதால் குற்றமில்லை எனத்தோன்றும்படி நீயும் நடந்து கொள்ள வேண்டும்.

குமார:—நீ இக்காரியத்தில் இறங்கும்போதே இதை இரகசியமாகவே நடத்துவதாகவும், வைத்திருப்பதாகவும் உறுதி மொழி யளித்திருக்கிறாய் எனத்தெரிகிறது.

மாரப்:—ஆம். அதனால் தான் இப்போது அந்த இரகசியங்களை வெளியிட அஞ்சுகின்றேன்.

குமார:—ஓ, அப்படியா? நீ இவ்வாறு ஒரு கொள்கைக்குக் கட்டுப் பட்டு நடப்பாய் என்று நான் நினைக்கவில்

லையே. நாம் எப்படி யிருந்தாலும் ஒருவர் சங்கதியை மற்றவர் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமா யிருப்பதால் இப்படி மறைத்துப் பேசுவதில் பய னில்லை. நானும் உன்னைப் போலவே எல்லாச் சங்கதி களையும் இரகசியமாகவே வைத்திருப்பதாக உறுதி கூறி யிருக்கிறேன். ஆதலின் நாம் இப்போது சிறிது வெளியிட்டுப் பேசிக்கொண்டாலும் நமது உறுதி மொழியி னின்றும் தவறியவர்களாகிறோம். ஆகவே விஷயத்தை ஆரம்பிக்கும் பொருட்டு நான் ஒன்றைச் சொல்கிறேன். நம்மிருவரையும் இங்கு அனுப்பியது மதனவல்லியே என்று கருதுகிறேன்.

மாரப்:—ஆம். என்னையும் மதனவல்லியே அனுப்பினாள். நான் இக்காரியத்தை மேற்கொள்ளும்போதே இதை மிக இரகசியமாக வைத்துக் கொள்வதாயும், நம் தேசத் தார் யார் வந்தாலும் அவர்களுடன் பேசுவதில்லை யென்றும் உறுதிமொழி கூறி யிருக்கிறேன்.

குமார:—நானும் இத்தேசத்துக்குப் புறப்படுமுன் இப்படியே உறுதி மொழிகளைக் கூறிவிட்டு வந்திருக்கிறேன். இங் குள்ள நம் தேசத்தார் யாருக்குமே நான் தெரியாம லிருக்க வேண்டு மென்னும் எண்ணத்துடன் தான் இம் மூலையில் ஒரு எளிய வீட்டில் மறை முகமாக வசித்து வருகிறேன்.

மாரப்:—நானும் இத்தகைய ஏற்பாட்டுடனேயே புறப்பட் டேன். பாஞ்சால நாட்டின் தெற்குப் பாகத்துக்குச் சென்று இளையராணி எங்கு தங்கி இருக்கிறாள் என் பதை அறிந்து எப்படியாவது அங்குள்ள மூன்று இளங் கன்னிகைகளில் ஒருத்தியுடன் சினேகம் செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதே கட்டளை.

குமார:—மரகதவல்லியின் பெண்கள்! எனக்கும் அத்தகைய கட்டளையே இடப்பட்டது. நான் மரகதவல்லியின் குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் மதனவல்லி அப்பெண்கள் மகா பரிசுத்தமான வர்கள் என்று கூறினள். அதன் காரணம் தான் இன்னதென்று விளங்கவில்லை. ஒருகால் நான் மிகுந்த சிரமப்பட்டேனும் அப்பெண்களில் ஒருத்தியின் சிநேகத்தைப் பெறவேண்டுமென்று அவள் நினைத்தாள் போலும்!

மாரப்:—எனது அன்புள்ள அம்புஜத்தின் நிலைமையினின்றும் கவனிக்கும்போது மதனவல்லி கூறியதெல்லாம் சரிதான் என்று தெரிகிறது.

குமார:—நானும் நேற்றிரவெல்லாம் அந்த ஜானகியின் காதில் ஆனந்தமாய் இன்பம் அனுபவித்ததில் அப்பெண்கள் மதனவல்லி கூறியதுபோலவே பரிசுத்தமுடையவர்களாயும், அன்புடையவர்களாயுமே இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

மாரப்:—அப்படியானல் நேற்றிரவு நாம் அடுத்தடுத்த அறைகளில் இருந்ததாகத் தெரிகிறது. எனெனின், ஜானகியின் அறை தன் அறைக்கடுத்த அறை என்று அம்புஜம் கூறினள். சென்ற ஏழு இரவுகளாக நான் அம்புஜம் அறையில் அவளுடன் இன்பமாகக் காலங்கழித்து வருகிறேன்.

குமார:—நீ உன் அம்புஜத்துடன் எப்படி நடந்து கொள்கிறாய் என்பது எனக்குத் தெரியாது; ஆனல் ஜானகியை நமது இஷ்டப்படி திருப்புவது மிகக் கஷ்டமாக இருக்கிறது.

மாரப்:—நான் இரண்டு கடமைகளைச் செய்து முடிக்கவேண்டியவனு யிருக்கிறேன். அதாவது மரகதவல்லியின் பெண்களில் யாரேனும் ஒருத்தியுடன் சினேகம் செய்து கொண்டு அவள் மூலம் அச்சகோதரிகளின் இரகசிய வேலைத் திட்டத்தை யறிந்து கொண்டு அவர்களுடைய எண்ணம் நிறைவேருதபடி அதைக் கெடுத்துவிட்டு இரத்னபுரி இளைய ராணிக்கு எத்தகைய ஆபத்தும் விளையாதபடி பார்த்துக்கொள்ள வேண்டு மென்பதே.

குமார:—அப்படிச் செய்ய முடியவில்லை யென்ருல் நீ யாருடன் சினேகம் செய்து கொண்டிருக்கிருயோ அப்பெண்ணை எப்படியாவது அங்கிருந்து வெளியேற்றிக் கொண்டுபோய் விடவேண்டு மென்றும் மதனவல்லி கூறி யிருப்பாள் என நினைக்கிறேன்.

மாரப்:—ஆம்; வாஸ்தவமே. மதனவல்லி அப்படித்தான் கட்டளை யிட்டிருக்கிருள். உனக்கும் இத்தகைய கட்டளையே யிட்டிருப்பாளெனத் தெரிகிறது. அம்புஜத்தினிடம் நான் காமலீலைகளை அதிகம் பெறுகிறேனேயன்றி நமது விஷயத்தில் ஒரு அடியும் முன்னேறிச் செல்ல முடியவில்லை. அவள் பேருக்குமட்டும் கன்னிகையாக இருக்கிருளே யொழிய காதல் விஷயத்தில் அதிக கைதேர்ந்தவளாக இருக்கின்ருள். அவள் சிறிய வயதினளே யாயினும் சூழ்ச்சிகளிலும் தந்திரங்களிலும் அதிக அனுபவம் பெற்றிருக்கிருள்.

குமார:—எனது ஜானகியும் அப்படித்தான் இருக்கிருள். எனினும் அவள் என்னை உண்மையில் நேசிக்கிருள் என்பதில் சந்தேகமில்லை. நானும் அவளை அதிகம் விரும்புகிறேன். சென்ற ஆறுமாதகாலமாக அவள் என் காதலியாக இருந்தும் அவளிடமிருந்து ஒருவார்த்தை

யும் பெறமுடியவில்லை. நேற்றுதான் ஏதோ ரகசிய மிருப்பதாக ஒப்புக்கொண்டாளென்றாலும் அவளிட மிருந்து அந்த ரகசியத்தை அறிந்து கொள்ள முடியு மென நான் நினைக்கவேயில்லை, ஆதலின் என்னுடன் வெளி யேறும்படி அவளை வற்புறுத்தியதில் ஒருமாத கால தவணை கேட்டிருக்கிறாள்.

மாரப்:—நான் அம்புஜத்துடன் அவர்களுடைய இரகசிய விஷயமாகப் பேச ஆரம்பிக்கும்போதெல்லாம் அவள் ஏதேனும் காமலீலைகளைச் செய்து அதை மறைக்கின் றாள். சம்பாஷணையை வேறு வழியில் இழுத்து விடு கின்றாள். இப்போது சொற்பகாலமாக எங்களுக்குள் அதிக நட்பு ஏற்பட்டதால் என்னுடன் வெளியேறும் படி கேட்டபோது, இளைய ராணியின் மாளிகையே நம் இருவருக்கும் வேண்டிய இன்பத்தை எத்தகைய தங்கு தடையுமின்றி ஆனந்தமாக அனுபவித்து வர இடங் கொடுக்கும்போது அங்கிருந்து வெளியேறவேண்டிய அவசிய மென்னவென்று சிரித்துக்கொண்டே கேட்கி றாள். ஆதலின் நான் என் முயற்சியில் ஒரு படியும் முன் னேற முடியாமல் யதாஸ்திதியில் இருந்து வருகிறேன்.

குமார:—என்னுடைய கதியும் அதே நிலைமையில் தான் இருந்து வருகிறது. எடுத்த காரியத்தைச் சாதிக்க முடி யாமல் இருக்கிறது. எப்படி யிருந்தாலும் மதன வல்லி இளைய ராணியின் விஷயத்தில் அதிக நட்பும் நல்லெண் ணமு முடையவள் போலவே தெரிகிறது.

மாரப்:—சந்தேகமில்லை. அதுமட்டுமல்ல. அவள் இளைய ராணிக்கு விரோதமாக யாரோ சிலர் செய்து வரும் சூழ்ச்சியைப் பற்றியும் அறிந்திருக்கிறாள். அச்சூழ்ச்சி

யில் மரகதவல்லியின் இம்மூன்று புத்திரிகளும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவள் சந்தேகப்படுகின்றாள். ஆகவே அப்பெண்களின் வேலையைக் கெடுத்துவிட வேண்டும் அல்லது அவர்களில் இருவரை அப்புறப்படுத்தி விடவேண்டு மென்னும் எண்ணத்துடனேயே நம்மிருவரையும் அனுப்பி யிருப்பதாகவும் தெரிகிறது.

குமார:—நீ இந்த விஷயத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து விட்டாய். இவ்வேலை மிகவும் சிரமமானதாயும் ரகசியமானதாயு மிருப்பதனால் தான் நாம் இருவரும் ஒருவரை யொருவர் அறியாதபடி இருக்கவேண்டு மென்று மதனவல்லி சர்வ ஜாக்கிரதையுடன் நடந்து கொண்டிருக்கிறாள். ஆனால் மூன்றாவது சகோதரி இரங்கம்மாள் இருக்கிறாளே, அவள் விஷயத்திலும் மதனவல்லி ஏதேனும் ஏற்பாடு செய்திருப்பாளென்றே நினைக்கிறேன்.

மாரப்:—ஒன்று மிராதென்றே நினைக்கிறேன். ஏனெனின், எங்களிருவரில் யாரேனும் ஒருவர் ஒருத்தியை வசப்படுத்திக்கொண்டு அவள் மூலம் அவர்களுடைய இரசியத்தை யறிந்துகொண்டு அச்சூழ்ச்சியைக் குலைத்து விடுவோம் என்று நம்பி யிருப்பாள்.

குமார:—அல்லது நாம் இருவரும் எப்படியேனும் இரு சகோதரிகளை வசப்படுத்திக்கொண்டு இளவரசியின் மாளிகையி னின்றும் வெளியேற்றி விட்டால் பிறகு ஒரு சகோதரியால் ஒன்றும் செய்ய முடியாமற் போகும் என்றும் மதனவல்லி கருதி யிருக்கலாம்.

மாரப்:—ஆம். இதுவரை நாம் இருவரும் பரஸ்பரம் நம் விஷயத்தை வெளிப்படுத்திச் சங்கதிகளை அறிந்து

கொண்டோம். நமது வேலை முடிந்ததும் நான் என் ஊழியத்துக்குத் தக்க சன்மானம் பெறப்போகிறேன். அம்புஜத்தை என் வசப்படுத்திக்கொண்டு அவளை என் காதலியாக அழைத்துச் சென்றுவிட்டால் அவளைக் காப்பதற்கு எனக்குப் பணம் வேண்டுமன்றோ? இப் படிப் பட்ட சம்பந்தத்துக்குக் காரணமாயிருந்த மதன வல்லி தானே அப்பொருளையும் கொடுக்கவேண்டும் ?

குமார:—ஓஹோ ! அப்படியானால் நீ வெற்றியடைந்தால் உனக்கு இன்ன சன்மானம் தான் செய்வதென்று முன் னமே முடிவு செய்ய வில்லையா? என் நிலைமையும் அப் படித்தான் இருக்கிறது. மதனவல்லியின் தாராளத் தன்மையையே எனக் களிக்கப்படும் சன்மானம் பொருந்தி யிருக்கிறது. எனினும் அவள் இளவரசரிட மிருந்து எதையும் பெறக்கூடிய சக்தியுடையவளாகவே இருக்கிறாள். ஆதலின் எனக்கு வருஷவாரி மூன்று அல்லது நாலாயிரம் பவுன்களைத் தரக்கூடிய ஒரு கௌர வப் பட்டத்தை அவள் எனக்கு வாங்கிக் கொடுத்தால் அதுவே என் சிரமத்துக்குப் போதிய சன்மானமாகும். ஜானகி என்னுடன் வந்து விடுவதாயின் அவளைக் காப் பாற்ற வேண்டியதும் அவசியமே. அதற்கும் மதனவல் லியே பணம் தருவாள் என்பதில் சந்தேகமில்லை.

மாரப்:—மதனவல்லி இதைச் செய்தே ஆகவேண்டும். ஏனெனின் அவள் இப்போது நமது தயவில் முற்றிலும் அகப்பட்டுக் கொண்டதை நீ அறியவில்லையா? இப் போது அவள் நடத்தும் வேலையால் அவள் இளவரசிக் குச் சிநேகிதியாய் வருவதால் இளவரசரின் எதிரியாகி வருகிறாள் அல்லவா?

குமார:—ஆமாம்; ஆயினும் நீ எடுத்துக்கொள்ளும் சிரமத்துக்குத் தக்க சன்மானத்தைப்பெற மதனவல்லியைப் பயமுறுத்தவோ அல்லது கட்டாயப் படுத்தவோ வேண்டிய அவசியமில்லை என்றே நினைக்கிறேன். அதிருக்கட்டும்; உன்னைக் கஷ்டங்களினின்றும் வெளிப்படுத்தியது அவள்தானே? நீ எப்படி மீண்டும் அவளுடைய தயவைப் பெற்றாய்.

மாரப்:—நான் எப்படியோ சமாளித்துக்கொண்டு அவளுடன் சமாதானம் செய்துகொண்டேன். ஆனால் சிறையினின்றும் விடுதலை யடைவதற்கு மட்டும் என் சொந்த பணத்தையே நான் ஏற்பாடு செய்துகொண்டேன், என்று கூறினானாயினும் அவனது உள்ளத்தில் தன்னை விடுவித்த மாதின்கணவனே தனக்கு இத்தகைய கேள்வி கேட்க நேர்ந்தது பற்றிப் பலவாறு சிந்திக்கலானான்.

குமார:—சரி, வீணாக நாம் வேறு விஷயங்களைப் பேசவேண்டாம். இதுவரை நாம் பேசிக்கொண்டதிலிருந்து நாம் இருவரும் ஒரேவிதமான வேலைக்காக ஒருவராலேயே அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதும், நாமும் ஒரே விதமான வாழ்க்கையைப் பின்பற்றி வருகிறோமென்பதும் நன்கு விளங்குகிறது. ஆதலின் இன்னும் சிறிது காலம் நாம் பரஸ்பரம் கலந்துகொண்டு நமது வேலையை முடிப்பதே சிலாக்கியம். ஆயினும் நாம் இருவரும் சந்தித்ததும் பரஸ்பரம் விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டதும் யாருக்கும் தெரியலாகாது. நான் இதை ஜான்கியிடமும் நீ அம்புஜத்தினிடமும் சொல்லலாகாது. அது போலவே நாம் மதனவல்லிக்குக் கடிதம் எழுதும்போதும் இதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க லாகாது. இவ்வாறு செய்வது இருவருக்கும் பலனைத் தரும்.

மாரப்:—நிச்சயமாக அப்படியே செய்யவேண்டும். ஆதலின் நாம் இப்போது மேலே நடக்கவேண்டிய காரியத்தைக் கவனிப்போம். எப்படியாவது நமது காரியம் விரைவில் முடிந்தால் போதும்.

குமார:—உண்மையிலேயே காரியத்தை விரைவில் முடித்து விட வேண்டியது தான். ஏனெனின் பேர் மாறுட்டத்துடன் வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது தெரியுமா? ஜானகியினுல் கிடைக்கும் அந்த இன்பம் இருப்பதனுல் தான் அந்தக் கஷ்டங்களெல்லாம் சிறிது மறைந்திருக்கிறது. மேலும் காரியத்தைச் சாதித்த பிறகு சன்மானம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையு மிருப்பதனுல்தான் கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். எனினும் இனியும் இவ்வாறு நீடித்திருக்க முடியாது. எப்படி நாம் காரியத்தைச் சாதிப்பது?

மாரப்:—நமது வேலை கஷ்டமானது தான். இப்பெண்களை இளைய ராணியிடம் பகிரங்கமாகக் காட்டிக் கொடுத்து விட லாகாதென்றும் மதனவல்லி கூறியிருக்கின்ருள்.

குமார:—நானும் அவ்வாறு செய்ய லாகாதென்பது தான் அவள் கட்டளை. மேலும் ஜானகியை நான் காட்டிக் கொடுத்து அவள் திடீரென்று வேலையினின்றும் நீக்கப் படுவதற்கு நான் காரணமாக இருக்கமாட்டேன். ஆனல் கூடுமாயின் அவளுடைய இரகசியங்களை அறிந்துகொண்டு அவை நிறைவேறுதபடி கெடுத்து விட முயற்சி செய்வேன்; அல்லது அம்புஜம் உன்னுடனும் ஜானகி என்னுடனும் வெளியேறும்படியேனும் செய்து அவர்களை அழைத்துக் கொண்டுபோய்

விடுவதே நலமா? எது நல்லது என்று நீ யோசித்துப் பார்.

மாரப்:—அதுவே சரி; நாம் இருவரும் நமது சாமர்த்தியத்தை எல்லாம் திரட்டி இதற்குத்தக்க வழியைக் கண்டு பிடிப்போம்.

பிறகு இருவரும் நாற்காலிகளை அருகில் இழுத்துப் போட்டுக்கொண்டு ஏதோ பெரிய இரகசியத்தைப் பேசுகிறவர்களைப்போல் ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். நேயர்களே! நாம் இப்போது மதனவல்லியின் ஆட்களாகிய இவ்விருவரையும் இங்கேயே யோசிக்கும்படியாக விட்டு இரத்தினபுரியில் நடைபெறும் சில விஷயங்களைக் கவனிப்போம்.

---

## 104 - வது அத்தியாயம்

சுகசிங்கம் பிரபு மதனவல்லிக்கு முத்துமாலைகளை அனுப்பிய அன்று காலை அவளுக்குக்கிடைத்த பல கடிதங்களில் ஒன்று செல்லப்பப் பிரபுவின் வளர்ப்புத் தாயார் பத்மாவதி யம்மாளால் எழுதப்பட்டது. அதில் அவள், தன் வீட்டில் தங்கியிருந்த ஜயதேவிக்கும் அவளது மகள் பத்மாட்சிக்கும் எப்படியாவது ஒரு தக்கவேலையில் அமர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆகவே மதனவல்லி தனக்கு இளவரசரிடம் இருக்கும் செல்வாக்கை உபயோகித்து ராணியின் விடுதியில் பெரியநாயகிச்சீமாட்டி தன் வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டதால் ஏற்பட்ட காலிஸ்தானத்தில் ஜயதேவியை நியமிக்க ஏற்பாடு செய்தாள். பெரியநாயகிச் சீமாட்டி குமாரவேல் பிரபுவினிடம் சம்பந்தம் வைத்துக்கொண்டாள் என்னும் விஷயம் இரத்தினபுரி நகர முழுதும் பரவிவிட்டதாய் பெரியநாயகி அவமானமடைந்து

தன் வேலையைவிட்டுப் போய்விட்டாள். ஆகவே ஜய தேவியை அங்கு நியமிக்கச் சௌகரியமா யிருந்தது. அவ்வாறு மதனவல்லியின் தயவினால் நியமிக்கப்பட்டதால் அவர்களிருவரும் நல்ல சம்பளத்தில் அரண்மனை அறைகளில் வசிக்கும் சந்தர்ப்பம் பெற்றார்கள். ஜயதேவி சுயநலமே உருவாக அவதரித்தவள். மிக்க சாதுர்யமாகப் பேசக்கூடியவள். ஆதலின் அவள் தன் சாமர்த்தியத்தால் பல பணக்கார மாதர்களின் சிநேகத்தைப் பெற்றிருந்தாள். மேலும் அவள் தன் அழகிய குமாரியின் மூலம் நல்ல நிலைமையை அடைந்துவிட வேண்டுமென்னும் ஆவலுடையவளாயிருந்தாள். தன் குமாரி ஒரு ஏழையின் மனைவியாயிருப்பதைவிட ஒரு பணக்காரரின் வைப்பாட்டியாக இருத்தலே நலமெனக் கருதுபவள். ஆகவே அவள் தன் மகளிடம் எப்படியாவது இளவரசர்களை வசீகரிக்கும்படி கட்டளை யிட்டிருந்தாள்.

ஆனால் பத்மாட்சி தன் தாயின் உபதேசத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். அவளுக்கு இருபத்தைந்து வயதாய் விட்டபடியால் தன் தாய் கூறுவதன் பொருளை அறிந்துகொண்டு வருத்தப்பட்டாள். அவளுக்கு மாதர்களுக்கு இருக்கவேண்டிய இயற்கைக்குணம் இன்னமும் இருந்து வந்தபடியால் தன் தாயின் சொற்படி நடந்து தன் கற்பை இழக்க விரும்பவில்லை. அவள் தற்கால ஒழுக்கக் கேடான வாழ்க்கையின் காற்று வீசக்கூடிய சந்தர்ப்பங்களில் வசித்துவந்தும் அவளுடைய மனம்மட்டும் ஒருவாறு அவ்விஷயங்களை அறிந்து கொண்டிருந்ததே யன்றி அவள் தேகம் அதுவரை சுத்தமானதாகவே இருந்தது. எனவே அவள் தன் தாயார் சொல்லும் விஷயங்களை அறியக்கூடிய சக்தியுடையவளாய் இருந்ததால் அவள் அதை வெறுத்

தாள். அழகிலோ பத்மாட்சி ரூபலாவண்ய முடையவளா யிருந்தள். அவள் பிரகாசமான கண்களேயும், கருத்து நீண்ட கூந்தலேயும், பவழம்போன்ற சிவந்த உதடுகளேயும், முத்துப் போன்ற வெண்மையாகவும் வரிசையாகவும் உள்ள பற்களே யும், சிறிதும் நோயற்ற திடசரீரத்தையும், உடையவளாய் இருந்தாள். அவள் குரல் அழகிய சாரீரத்துடன் பேசும் போதே வீணே வாசிப்பதுபோல இனிமையுடைய தாயிருந் தது. அவளது பார்வை முதலில் சந்தேகத்தை அளிக்குமாயி னும் நாளடைவில் பழக்கத்தால் அப்பார்வை நல்ல எண்ண முடையதே என்பதையறிந்து கொள்ளலாம். அவள் அழ கிய உடைகளேயும் நகைகளேயும் அணிந்துகொண்டு நடந்து செல்லும்போது பார்த்தால் அப்சரஸ்திரீகளில் ஒருத்தி நடப் பதேபோல் தோன்றும். அப்போது அவளேக் கண்ணுறும் ஆடவர்கள் எப்படிப்பட்ட பரிசுத்த இருதயமுடையவர் களே யென்றாலும் அவளது மோகவலேயில் சிக்கித்தவிப்பர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லே. ஆகவே அவள் தனக் கிஷ்டமான ஆடவரைத் தன் வசப்படுத்துவதற்காக மிகச் சிரமப்பட வேண்டிய அவசிய மில்லாமலிருந்தது. அவள் அந்த அரண்மனேயிலுள்ள மற்ற மாதர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கும் போதெல்லாம் அவளும் அரண்மனே மாதர் களில் ஒருத்திபோல் காணப்பட்டாளே யன்றி அவளே யொரு வேலேக்காரி என்று சொல்லமுடிய வில்லே.

இவ்வாறு இருக்கையில் இளவரசர் ராணியின் அரண் மனேக்கு அடிக்கடி போய் வரவேண்டிய அவசியம் ஏற்பட் டது. ஏனெனின் தன் குமாரி ஷண்பகவல்லிக்கு யுக்த வய தாய் விட்டபடியால் அவளுக்கு விரைவில் கலியாணம்செய்து விட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அடிக்கடி அங்கு தன் தாயாருடனும் மகளுடனும் யோசிப்பதற்காக வந்து

போவார். அப்படிப் பலமுறை வந்துபோகும் சமயத்தில் அவர் பத்மாட்சியின் அழகைக் கவனிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. இளவரசர் ஒருமாதைக்கூர்ந்து கவனிப்பாராயின் அது அவளைத்தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டுமென்னும் கெட்டஎண்ணத்துடனேயே யன்றி வேறு நல்ல எண்ணத்துடன் இருப்பதே யில்லை. அவருக்கு மதனவல்லியைப்போன்ற மகா அழகும் சாதுர்யமும்வாய்ந்த ஒருகாதலி இருந்தும் மற்றும் தான்பார்த்து மோகிக்க நேரிடும் எல்லாப் பெண்களையும் எப்படியாவது தன் வசப்படுத்திக் கொண்டு விடுவார். அவர் உயர்ந்த அந்தஸ்திலும், செல்வத்துடனும், செல்வாக்குடனும் இருந்தபடியால் தான் அவ்வாறு தான் நினைத்ததை யெல்லாம் சாதித்துக்கொள்ளும் சௌகரிய மிருந்தது. அந்தோ! இவ்வாறே இத்தகைய கொடிய ஆடவர்களால்தான் பரமசாதுக்களான எத்தனையோ மாதர்கள் தங்கள் கற்பை இழக்கவேண்டி யிருக்கிறது. காமநோய் பிடித்த வாலிபர்கள் ஒன்று மறியா அபலைகளான சிறு பெண்களைப் பலவகைத் தந்திர சூழ்ச்சிகளால் மயக்கிக் கெடுத்துவிடுகின்றனர். தேசத்தில் நல்ல ஒழுக்கக்கல்வி அதிகமாகப் பரவி இருக்குமாயின் இவ்வளவு கேடுகள் விளையாது.

பரிதிபுரத்தில் குமாரவேல்பிரபுவும், மாரப்பனும் ஜானகியிடமும், அம்புஜத்தினிடமும் மோகங்கொண்டு இன்பத்தை அனுபவித்துவரும் அதே காலத்தில் இரத்தினபுரியில் இளவரசன் தன்மகள் விவாகத்துக்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். ஒருநாள் காலை அவர் தன்தாயின் அரண்மனைக்குச் சென்றபோது அன்று பூராவும் அங்கு தங்கியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் இராணியின் அரண்மனையினின்றும் விரைவில் திரும்பிவிடுவதென்றும், அன்று

மாலை அங்கு வரப்போகும் பலருக்கு விருந்தளிப்பதென்றும் ஏற்பாடு செய்திருந்தும் இராணியின் அரண்மனையில் தங்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் போதுமெனக் காத்திருந்த இளவரசர் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் இராணியின் அரண்மனையில் தங்கிவிடுவதென முடிவுசெய்து அதை மதனவல்லிக்கும் சொல்லி :யனுப்பிவிட்டார். அப்படியே இளவரசர் அன்று முழுதும் அங்கு தங்கியிருந்தார். மாலைச் சிற்றுண்டி அருந்துகையில் விருந்தாளர் அதிகமாயில்லாதிருந்ததால் இராணியின் மாளிகையைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அருந்த உட்கார்ந்தபோது இளவரசர் மிக்க சாமர்த்தியத்துடன் பத்மாட்சியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். அவருடைய தந்தையாகிய அரசருக்குப் பைத்தியம் அதிகரித்து விட்டிருந்தபடியால் அவரை ஒரு தனியறையில் விட்டுப் பூட்டியிருந்தார்கள். இளவரசரின் குமாரி சண்பகவல்லியும் மனத்திருப்தியில்லாமல் இருந்தபடியால் சாப்பிடக் கூட்டத்துக்கு வராமல் தன் அறையிலேயே இருந்துவிட்டாள். ஆகவே சாப்பிடுமிடத்தில் அதிகமாகக் கூட்டமில்லாமலிருந்தபடியால் இளவரசர் பத்மாட்சியுடன் தாராளமாகப்பேசித் தன் சாமர்த்தியத்தையெல்லாம் அவளிடம் காட்டினார். அவளும் கூர்மையான அறிவும், சமயோசித யுக்தியுமுடையவளா யிருந்ததால் அவருக்குத் தக்கபடி சாமர்த்தியமாகவும் சாதுர்யத்துடனும் நடந்துகொண்டாள். அப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அவளுடைய அழகையும், வசீகரத்தன்மையையும், இனிய குணத்தையும் கவனிப்பதில் இளவரசர் தவறவில்லை. ஆகவே அவர் எப்படியாவது அவளிடம் இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால் பத்மாட்சியோ இளவரசருடன் ஒளி மறைவின்றித் தாராளமாகப் பேசினாள் என்றாலும் மனத்தில் எத்தகைய கபடத்தன்மையையும்

வைத்திருக்கவில்லை. இளவரசர் ஏதோ கெட்ட நோக்கத்துடன் தன்னைப் பார்க்கிறாரென்று அவள் கருதவில்லை; அவ்வாறே அவளும் கெட்ட எண்ணத்துடனும் இளவரசரைப் பார்க்கவில்லை. ஆனால் சொற்பநேரம் கழித்தபிறகு இளவரசர் தன்னை ஒருவிதமான நியசிந்தனையுடன் பார்ப்பதாகத் தெரிந்துகொண்டாள். அப்போது மறுபுறம் திரும்பிப் பார்த்தபோது தன் தாயாரும் திருப்தியான பார்வையுடன் தன்னையும் இளவரசரையும் பார்ப்பதைக்கண்டாள். அப்போது அவளுக்கு ஒருவிதமான அச்சம் தோன்றியது. ஆகவே அவள் முகத்தில் ஒருவித விகாரத்தோற்றம் காணப்பட்டது. முன்பு பேசியதுபோல் அவ்வளவு தாராளமாகப்பேச அவளால் முடியவில்லை. எனினும் அதைக் காட்டிக்கொள்ளாமல் மறைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. சற்று நேரத்துக் கெல்லாம் இராணியாரும் சாப்பாட்டு அறையைவிட்டுச் சென்றதால் மற்றவர்களும் எழுந்துபோக நேர்ந்தது. பத்மாட்சியும் தான் அவ்விடத்தைவிட்டுச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் வாய்த்ததுபற்றிச் சந்தோஷமடைந்தாள். எல்லாரும் சென்ற பின்னரும் இளவரசர்மட்டும் சிறிதுநேரம் அங்கேயே தங்கியிருந்தார். பிறகு இராணியாரின் மாளிகையைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டபோது பத்மாட்சியும் எங்கேயாவது இருக்கிறாளாயென்று கவனித்துக்கொண்டே வந்தார். அவள் இராணியின் அருகில் இருப்பதைக்கண்ட இளவரசர் அவளுடன் ஒன்றும் பேச முடியாதென்பதை உணர்ந்து மற்றும் சுற்றித்திரிந்ததில் தனியான ஓரிடத்தில் பத்மாட்சியின் தாயார் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். எனவே அவளிடம் மிக்க அனுதாபமுள்ளவரேபோல் அவர் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு பேசலானார். "பெரிய நாயகிச் சீமாட்டி திடீரென்று ராஜிநாமா செய்துவிட்டுப் போன இந்த ஸ்தானத்தில் உன்னை நியமிக்கவேண்டு

மென்று நான் என் தாயாரிடம்கூறி அவ்விஷயத்தில் வெற்றி யடைந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன்.''

ஜயதேவி:—தாங்கள் எனக்காக எடுத்துக்கொண்ட சிரமத் துக்காக நான் வந்தனம்செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். அதுபோலவே என்மகள் விஷயத்திலும் தாங் கள் காட்டும் உதாரகுணத்துக்காக நான் தங்களைப் போற்றுமலிருக்க முடியவில்லை.

இளவரசர்:—உன்மகளா! யார் அது? இன்று மாலை சிற் றுண்டி யருந்தும்போது என் அருகில் உட்கார்ந்திருந்த அந்த அழகியபெண் உன் குமாரியா? ஆமாம்; நீங்கள் இருவரும் ஒன்றாக முன்பு இருந்ததை நான் பார்த்தது இப்போதுதான் ஞாபகத்துக்கு வருகிறது.

ஜய:—ஆம்; அவள் எனது குமாரிதான், அவள் மிகவும் கூர்மையான அறிவுடையவள்.

இள:—ஏன் உன் மகளுக்கேற்ற கணவனைத்தேடி இன்னும் கலியாணம் செய்யவில்லை.

ஜய:—தாங்கள் பிரம்மசாரிகளுக்கெல்லாம் வரிவிதிக்கும்படி தங்கள் அரசவைக்கு உத்தரவிடவேண்டுமென்று நினைக் கிறேன். எனது மகள் நல்ல இடங்களிலெல்லாம் பழ கியவளாய் இருந்தும், அழகானவளாயிருந்தும் வரன் கிட்டவில்லை. என்ன; அவள் அழகாயிருப்பதைத் தாங் கள் காணவில்லையா?

இள:—சந்தேகமா? அவள் யௌவனபிராயமுடையவளாயும் மிக்க ரூபலாவண்யமுடையவளாயும், மணவாழ்க்கைக் கேற்றவளாயும் இருக்கின்றாள் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை.

ஜய:—ஐயா, தாங்கள் அவளைப்பற்றி இவ்வளவு புகழ்ந்தது கண்டு அவளுடைய தாய் என்னும் முறையில் எனக்கு மிக்க சந்தோஷமாகவே இருக்கிறது. அவள் மிக அழகாகவே இருப்பதாக இன்று காலையிலும் பலர் என்னிடம் கூறினார்கள். நான் இவ்வாறெல்லாம் என் மகளின் பெருமையைப்பற்றிப் பேசுவதற்காக என்னை மன்னிக்கவேண்டும்.

இள:—குற்றமில்லை. முழுதும் சொல். நீ உன் மகளின் அழகைப்பற்றி ஏதேதோ சொல்லிக்கொண்டிருந்தாயே அதைப்பற்றியே சொல். அதை நிறுத்தவேண்டிய அவசியமில்லை. அதைக்கேட்க எனக்கும் மிகச் சந்தோஷமாக இருக்கிறது. உன்மகள் அழகிய பெண்களில் ஒருத்தி என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

இளவரசரின் மனோ எழுச்சியையும், காமவிகாரத்தையும், அளவிலா ஆவலையும் அறிந்துகொண்ட ஜயதேவி மெல்லியகுரலுடன், "ஆம், இந்த அரண்மனையிலுள்ள மற்ற மாதர்களைவிட என் குமாரியே அழகானவளென்றும் வேறு சிலர் பேசிக்கொள்கின்றனர்" என்றாள்.

அப்போது இளவரசர் மிக அவசரமாக, "நீ அவளுக்கு விவாகம் செய்துவிடவேண்டும். இப்படிப்பட்ட அழகும் யௌவனமும் வாய்ந்த ஒருபெண்ணைத் தனியாக வசிக்கும்படி விட்டுவைப்பது மகாபாபமான காரியமாகும்," என்றார்.

ஜய:—விவாகம் செய்துவிடு என்று வாயால்கூறிவிடுவது மிக எளிது. ஆனால் அவள் ஏதோ ஒரு ஏழையின் மனைவியாகப் போய்விடுமுன்னர் அவளுக்கேற்ற காதலனைத் தேடிக் கண்டுபிடிப்பது சிரமமான காரியமல்லவா?

இளவரசர் ஜயதேவி அவ்வாறு கூறியதன்பொருளை ஒருவாறு உணர்ந்துகொண்டு அதில் ஏதோ மர்மம் இருக்க

வேண்டுமென்பதை யறிந்து, "நீ மிகவும் புத்திசாலி; சில புத்திசாலிகளும், ஜாக்கிரதையுள்ளவர்களுமான தாய்மார்கள் தான் தங்கள் குமாரிகள் ஏழைகளின் மனைவியராய் இருப்பதைவிடப் பணக்காரர்களின் வைப்பாக இருப்பதே நல மென்பதை உணர்கின்றார்கள்," என்றுகூறினார்.

ஜய:—ஆம்; அவ்வாறு செய்வதால் ஒழுக்கத்தினின்றும் தவறிவிட்டதாகச் சிலர் கூறலாம். எனினும் இவ்வுலக வாழ்க்கையின் இன்பங்களைக் கவனிக்கும்போது அவ்வாறு செய்வதே சரி என்பது புலனாகும்.

இள:—நீ இப்போது கூறியது உண்மைதானா? நீ அப்படிப் பட்ட எண்ணத்துடனேயே உன்மகளை விவாகம்செய் யாமல் வைத்திருக்கிறாயா?

ஜய:—ஆம்; நிச்சயமாக அத்தகைய உறுதியான எண்ணத் துடனே அதைத் தங்களிடம் கூறினேன்.

இள:—இத்தகைய கொள்கையைப் பிறர்விஷயத்தில் உப தேசிப்பாயேயொழிய உன் சொந்தவிஷயத்தில் அனுஷ் டிப்பாயோ?

ஜய:—இல்லவே இல்லை; நான் எதைச்சொல்கிறேனோ அதை சொந்தத்திலும் அனுஷ்டிக்கத் தயாராயிருக்கிறேன்.

இள:—அப்படியானால்! யாரேனும் ஒருவர் உன்பேச்சைச் சோதித்துப்பார்க்க எண்ணினால் என்னசெய்வாய்?

ஜய:—செய்வதென்ன? சம்மதப்படுவேன். ஆனால் என் சம் மதம் ஆளைப் பொருத்திருக்கிறது.

இள:—சரி; உதாரணமாக என் சகோதரர்களில் யாரேனும் ஒருவர் உன்மகளை வைப்பாகக்கொள்ள விரும்புவதாக வைத்துக்கொள்வோம். ஆனால் உன்மகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அப்போது நீ என்னசெய்வாய்?

ஜய:—இவ்விஷயத்தில் என் புத்திரியின் பதில் யாதாயிருக்குமென்று எனக்குத் தெரியாது. எனினும் நான் என் செல்வாக்கையெல்லாம் உபயோகித்தும், புத்திமதிகளைச் சொல்லியும் அவள் அதற்குச் சம்மதப்படும்படி ஏற்பாடு செய்வேன் என்பது திண்ணம்.

இள:—இப்போது உண்மையைப்பேச ஆரம்பிப்போம். என் தம்பிமார்களுக்குப் பதிலாக இளவரசனுகிய நானே, உன் குமாரியின் அழகின் இன்பத்தை அனுபவிக்க விரும்புவதாக வைத்துக்கொள்வோம். அப்போது உன் சம்மதம் எப்படி இருக்கும்?

இளவரசர் தன் மகளிடம் காதல்கொண்டு உண்மையில் தன் இருதயத்தில் இருப்பதையே சொல்கிறார் என்று கண்டு கொண்ட இவ்வுலக இன்பங்களில் அதிக மோகங்கொண்டவளான ஜயதேவி, "உடனே யோசனையில்லாமல் ஒப்புக் கொள்வேன்," என்று கூறினாள்.

உடனே ஒப்புக்கொள்வதாக அவள் தெரிவித்ததும் தன் காரியம் முடிந்ததென நினைத்த இளவரசர் தைரியத்துடனும் மிக ஆவலுடனும், "நீ கூறுவது உண்மைதானா? அப்படியாயின் இன்றிரவே முடியுமோ?" என்றார்.

ஜய:—ஆம்; இன்றிரவு வேண்டுமென்று தாங்கள் விரும்பினால் அப்படியே செய்வேன். தங்கள் தாயார் விரைவில் படுக்கைக்குச் சென்றுவிடுவார். பிறகு நான் என் மகளிடம் இதைத் தெரிவித்து ஏற்பாடு செய்கிறேன். தாங்கள் ஏதேனும் ஒரு அறையில் காத்திருந்தால் அங்கு வந்து முடிவைத்தெரிவிக்கிறேன்.

இள:—சரி, மிக சந்தோஷம். ஆயினும் பத்மாட்சி நம்மீது ஏதோ சந்தேகங்கொண்டு நம்மை வெறுக்கிறவள்போல் பார்க்கிறாளே. அது உனக்குத் தெரிகிறதா?

ஜய:—ஆம்; இருக்கலாம். ஏனெனின் அவள் மிக்க ஒழுக்க முள்ள பெண் என்று நான் முன்னமே தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன் அல்லவா?

இள.—அவள் தன் ஒழுக்கத்தினின்றும் தவறச்சம்மதப்பட் டாலும், சம்மதப்படாவிட்டாலும், அவள் இப்போது என் மாளிகையில் இருப்பதால் என் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறாள். ஆகவே முதலில் நல்ல வார்த்தை களைச் சொல்லிப்பார்ப்போம். அப்படியில்லையென்றால் அவள் தாய் என்னும் முறையில் நீ சம்மதித்துவிட்டால் நான் பலாத்காரத்தை உபயோகித்து என் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வேன்.

ஜய:—என் மகள் சமயத்துக்குத் தக்கபடி புத்திசாலித்தன மாகவே நடந்துகொள்வாள் என நம்புவோம். தாங் கள் அவளுக்குத்தர விரும்பும் கௌரவத்தை இழக்க அவள் சம்மதப்படமாட்டாள் என்றே நம்புகிறேன்.

பிறகு சிறிதுநேரம் பணப்பேய் பிடித்த அயோக்கிய ளாகிய ஜயதேவியும், காமப்பேய்பிடித்த கண்ட பெண்களைக் கெடுக்கும் அயோக்கியனாகிய இளவரசரும் பேசிக்கொண் டிருந்து பத்மாட்சியின் இன்பத்தை அனுபவிப்பதற்காக இவ் வளவு தருவதென்றும், மற்ற நிபந்தனைகளைப்பற்றியும் பேரம் பேசி முடித்தார்கள். இதனால் ஜயதேவி தன்மகளை இளவரச ருக்குத் தத்தம் செய்வதென முடிவுக்கு வரப்பட்டது.

நேயர்களே! பார்த்தீர்களா? இப்படிப்பட்ட தாய்மார் களும் உலகில் பலர் இருக்கின்றனர். இயற்கையாகவே பெண்களுக் கிருக்கவேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும்பெற்ற சிறுமிகளைத் தங் கள் தாய்மார்களே இவ்வாறு கேவலம் பணத்துக்கும், இவ்

வுலக இன்பங்களுக்கும் ஆசைப்பட்டுக் கெடுத்துவிடுவதென்றால் இதைவிடக் கொடுமை வேறு என்ன இருக்கப்போகிறது. சிறுமியர் அறியாமையால் ஏதேனும் தவறு செய்துவிட்டாலும் அதைத் திருத்தவேண்டியது தாய்மாரின் கடமையாயிருக்க அவர்களே முன்னின்று கெடுப்பதென்றால் அப்படிப்பட்ட தாய்மார்களைத் துரோகிகளென்று கூறுவதா? பெண் பேய்கள் என்று கூறுவதா என்று நமக்கு விளங்கவில்லை. உலகம் பழிக்கும்படி ஒரு செல்வனுக்கு வைப்பாக இருப்பதைவிட ஒரு ஏழையாயினும் ஒருவனுக்கு உத்தம பத்தினியாய் அமர்ந்து இல்லறவாழ்க்கையை முறைப்படி நடத்தி மேன்மையை யடைவதுதான் சிலாக்கியம். மேலும் ஆடவர்கள் ஒரே வைப்பாட்டியிடம் முழு அன்பையும் செலுத்தாமல் கண்ட மாதர்களிடம் பறந்து செல்வார்களாதலால் அவர்களை நம்பி விவாகமும் செய்து கொள்ளாமல் வைப்பாகத் தங்குவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதுபோலவே முடியும். ஆதலின் உத்தம மாதர்கள் தங்களுக்கேற்ற மணாளனைக்கண்டு விவாகம் செய்துகொண்டு இல்லறத்தை ஒழுங்குடன் நடத்துவது தான் முறைமையாகும்.

186552

## 105 - வது அத்தியாயம்

அன்று இரவு பதினொருமணிக்கு ராணியார் அன்றையமுறைப்படி யார் தன் காவலாக இருக்க வேண்டுமோ அவர்களுடன் படுக்கையறைக்குப்போய்விட்டதால் பத்மாட்சியும் தன் அறைக்குச்சென்றாள். அவள் பின்னாலேயே அவளது தாயாரும் அவ்வறையில் நுழைந்தாள்.

அப்பெண்ணுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறை ஒரு நீளமான தாழ்வாரத்தின் கோடியில் அதிக ஜனநடமாட்டத்துக்குச் சந்தர்ப்பமில்லாத இடத்தில் இருந்தது. மேலும் அந்த சிறிய அறை ஒரே ஒரு ஜன்னலையுடையதாயும், சிறிது பள்ளமாயும் இருந்தது. இதனுல் அவள் தனிப்பட்ட ஓரிடத்தில் இருந்தாள் என்று கூறலாம்.

தாயாரும் மகளும்) அவ்வறையில் நுழைந்ததும், மகள் தாயாரைக்கண்டு, "அம்மா; இன்று என்மனதுக்கு ஏதோ அச்சமாக இருக்கிறது. இன்று ஏதேனும் அபாயம் நேரும் போலிருக்கிறது," என்று கூறினுள்.

தாயார்:—சீ; அப்படிக்கூருதே! அபாய மொன்றுமில்லை. அதற்குப்பதிலாக நற்காலமே தன் பொன்னெளியை உன்மீது வீசத்தொடங்கி யிருக்கிறது.

மகள்:—என்னம்மா நீ கூறுவது? அதன்பொருள் விளங்கவில்லை. நீ என்னசொல்கிருய் என்பதை விவரித்துச் சொல்.

தாயார்:—குழந்தாய்! உனக்கு இப்போதுதான் பதினறு, பதினேழுவயதாக இருந்தால் இப்போது நான் உன்னிடம் சொல்லப்போகும் விஷயத்தில் அதிக சிரமப்படவேண்டும். உனக்குத் தக்க யௌவனபிராயம் வந்துவிட்டதால் நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை. மேலும் நீயே உணர்ந்துகொண்டிருப்பாயென்றும் நம்புகிறேன்.

மகள்:—ஆம்; நான் ஏதோ பயப்படுகிறேன் என்பது உண்மை. இன்று ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால் அது எனக்குப் பேராபத்தாகவே முடியுமென்பதில் சந்தேகமில்லை. அப்படி ஏதேனும் நடந்தால்

அப்போது நான் என் தாயாராகிய உன்னையும் வெறுக்க நேரிடும்.

தாயார்:—பத்மாட்சி! நீ கூறுவது சற்றும் சரியாயில்லை. நான் உன்னைப் பாலியம்முதல் பற்பல செல்வர்கள் வீட்டிலும் வைத்துக்கொண்டு வளர்த்ததும் மதனவல்லியின் சிநேகத்தைப்பெற முயற்சித்ததும் ஏன் என்பதுபற்றி முன்னமே உனக்குத் தெரிவித்திருக்கிறேனல்லவா? மதனவல்லி இளவரசரின் காதலியாகப்போகிருள் என்பதை நான் உன்னிடம் தெரிவித்தபோது நீயும் சிறிது பொருமை யுடையவள்போல் காட்டிக்கொள்ளவில்லையா?

மகள்:—ஆம்; அதெல்லாம் உண்மைதான். அதற்காக இப்போது என்னை இளவரசருக்கு விற்றுவிடுவதாகயோசித்திருக்கிருயா? என் தாயாரே என்னைக்கேவலம் பணத்துக்காகப் பிறரிடம் சேர்த்துவைப்பதும் நீதியாகுமோ?

தாயார்:—அறிவில்லாப் பெண்ணே! அதிருஷ்டவசமாகக் கிடைக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிடுவதாகத் தீர்மானித்திருக்கிருயோ? சிறிதுநேரம் பொறுமையுடன் யோசித்துப்பார், மதனவல்லி பெற்றிருப்பது போன்ற நல்ல அந்தஸ்தையும் சுகசௌகரியங்களையும் பெறக்கூடிய சந்தர்ப்பம் உனக்கு இப்போது கிடைத்திருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

மகள்:—ஏன்; மதனவல்லி கெட்டிக்காரிதான். தான் இளவரசருக் குடன்படுவதற்குமுன் ஒருவரை விவாகம் செய்துகொண்டுவிட்டாள். ஆகவே அவள் இளவரசருடன் சம்பந்தப்பட்டாலும் அது உலகப்பழிக்குக் காரணமாகாமல் இருக்கிறது. நானும் செல்லப்பப்பிரபு

போன்ற ஒருவரை விவாகம் செய்துகொண்டுவிட்டிருந்தால், மதனவல்லிக்குக் கிடைத்ததுபோன்ற சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தால் அவள் நடந்துகொண்டது போலவே நடந்துகொள்ளலாம். ஆனால் இப்போது நான் பிறருக்கு விற்கப்படச் சம்மதிக்கமாட்டேன். நீயும் இளவரசரும் சேர்ந்து இவ்விஷயத்தில் ஏதோ முடிவு செய்துவிட்டிருப்பதாகத் தெரிகிறது. விவாகமாகாத ஒரு கன்னிகை இவ்வாறு மற்றவருடன் சேர்த்துவைப்பதால் பிறகு பழிக்கு ஆளாக நேரிடுமென்பதை மறக்கவேண்டாம். மதனவல்லி இப்போது ஒரு குழந்தையைப்பெற்றால் அக்குழந்தைக்குச் சட்டபூர்வமான ஒரு தந்தை இருக்கிறார். ஆனால் நான் இளவரசரின் விருப்பத்துக்குட்பட்டு எனக்கொரு குழந்தை பிறந்துவிடுமாயின் அப்போது என்கதி யாதாகும்? மேலும் பெண்களைக் கண்டமாத்திரத்தில் அவர்களிடம் இச்சைகொண்டு எப்படியாவது அவர்களைக் கெடுக்கும்குணமுள்ள ஒருவருடன்சேர நான் விரும்பவில்லை. ஆகவே இளவரசரின் வைப்பாட்டியாக இருக்க நான் சம்மதப்படவில்லை யென்பதை நிச்சயமாகவும் உறுதியாகவும் தெரிவிக்கிறேன்.

தாயார்:—நீ பெரியமுட்டாள் என்பதில் சந்தேகமில்லை. உன் நன்மையையும் நீ கவனிப்பதாகத்தெரியவில்லை. உனக்கு இப்போது வயது இருபத்தாறாய்விட்டது. இன்னும் கலியாணமில்லாமலும், தக்க காதலனுடன் இளமைப் பருவத்தை அனுபவிக்கமுடியாமல் இருக்கிறாய். இந்த வயதில் நீ கற்புடன் இருப்பதாகச்சொன்னால் யார் நம்பப்போகிறார்கள். ஆகவே இளவரசரின் விருப்பத்துக்கிணங்கிவிட்டால் இவ்விஷயம் வெளியில் பரவாத

படி அவர் பார்த்துக்கொள்வார். மேலும் பல பணக்காரர் குடும்பப்பையன்கள் இளவரசரின் தயவைப் பெறும்பொருட்டேனும் உன்னை விவாகம் செய்து கொள்வார்கள். அப்போது உன் விஷயத்தில் ஏற்படும் சந்தேகங்களும் நிவர்த்தியாய்விடுகின்றன. ஆதலின் நீ மிக்க சாமர்த்தியசாலியாய் நடந்துகொள்வாய் என்று நம்புகிறேன்.

மகள்:—இல்லை; இந்த மானக்கேடான ஒப்பந்தத்தை நிறைவேற்றிவைக்க என்னுல்முடியாது. இந்த இழிவான தொழிலை ஏற்றுக்கொள்ள சம்மதிக்க மாட்டேன். ஆகவே, அம்மா! இதை மறந்துவிடு. இவ்விஷயமாய் நீ இன்னும்பேசினுல் நான் உன்னை வெறுக்கநேரிடும்.

தாய்:—என் அன்புள்ள மகளே! சிந்தனைசெய்து யோசித்துப்பார். அவசரப்பட்டுப் பதில்சொல்லிவிடாதே. எப்போதும் பிடிவாதம்கூடாது.

மகள்:—உன் மகளையே நீ வியபிசாரத்தில் ஈடுபடுத்த முயல்வதற்காகக் கடவுளே உன்னை மன்னிக்கவேண்டும். என்று சொல்லிக்கொண்டே கண்ணீர்விட்டழ ஆரம்பித்தாள்.

தாய்:—மகளே! அழாதே; இப்போது இதற்கு அழநேரிடுவதைத் தடுக்கலாமென்றுலும் பின்னுல் நீ அழுது தானே ஆகவேண்டும். என் துரதிருஷ்டம் என்னைக் கஷ்டங்களில் சிக்கவைத்து நான் சொல்லொணுத் துயரமடையும்போது நீ அழுதுதானே ஆகவேண்டும்.

மகள்:—துரதிருஷ்டமா? என்ன சொல்கிறுய்? ஒன்றும் விளங்கவில்லை.

தாய்:—பல வருஷங்களுக்குமுன் நான் கடன்பட்ட ஒரு பெரிய கடன்காரன் இப்போது சொல்லொணுத் தொந் தரைசெய்கிறுன். அவனுக்குப் பல வருஷங்கள்வரை நான் இருக்குமிடமே தெரியாமல் இருந்தது. இப் போது சில வாரங்களுக்குமுன் அவன் என்னைப் பார்த்துவிட்டான். இன்னும் ஒருவாரத்தில் அவனுக் குப் பணங்கொடாவிட்டால் என்மீது வாரண்ட் பிறப் பித்துச் சிறையிலிடுவதாகக் கூறுகிறுன். அவ்வாறு ஏதேனும் நேர்ந்துவிட்டால் அத்துடன் என்வாழ்க்கை அழிந்தது. என்னுடன் மட்டும் நிற்கிறதா? அந்தோ! உன்கதி என்னவாகும்? நீயும் அழியவேண்டியது தானே. அப்போது நீ அவமானத்தால் இந்த அரண் மனையிலும் வாழமுடியாமல் எங்கேயாவது மறைந்து காலங்கழிக்க வேண்டியதாகத்தானே நேரிடும்.

மகள்:—அம்மா! அந்தக் கடன்காரனுக்குக் கொடுக்கவேண் டியதொகை எவ்வளவு இருக்கும்?

தாய்:—மகளே! சுமார் நாலாயிரம் பவுன்களாகின்றன. எங் கிருந்து சமாளித்து எப்படித்தீர்ப்பது?

மகள்:—ஐயையோ! நாலாயிரம் பவுனு? இந்தத்தொகை மொத்தத்தையும் ஒரேமுறையில் கொடுக்கவேண்டுமா? நமது சம்பளத்தை அடகுவைத்து எங்கேனும் கடன் வாங்கினுலென்ன?

தாய்:—அவ்வாறு செய்துவிட்டால் நாம் இந்த அரண்மனை வாழ்க்கைக்கேற்ப இத்தகைய நகைநட்டுகளுடனும் பட்டாடைகளுடனும் வாழமுடியுமா? மேலும் சம் பளம் அடகுவைத்து விட்டதாக அரண்மனையிலுள் ளோர்க்குத் தெரிந்துவிட்டால் மற்றவர்கள் நம்மை

அவமதிப்பார்களன்றோ? இதையெல்லாம் எப்படியா வது சமாளித்துக் கொள்ளலாமென்றாலும் கடன்காரன் அதுவரை காத்திருக்க மாட்டான்போலக் காணப்படு கிறது. அவன் அவசரப்படுகிறான். உடனே பணம் வேண்டுமாம். நாளை பணம்தராவிட்டால் வாரண்ட் வந்துவிடுமே.

மகள்:—ஐயோ கடவுளே! இவைகளெல்லாம் உண்மை தானா? நான் யாது செய்வேன். சங்கடத்தில் சிக்கிக் கொள்ள வேண்டியதாய்விட்டதே!

தாய்:—உண்மைதான், பொய்யென்று நினைத்தாய். நான் பொய்சொல்லியும் உன்னைத் துன்பப்படுத்துவேனோ? இதோ இரு. நான் இதுசம்பந்தமான சில கடிதங் களைக் கொண்டுவருகிறேன்.

மகள்:—வேண்டாம்; அம்மா! நான் உன்னை நம்பமாட் டேனா? ஆனால் நீ மதனவல்லி, செல்லப்பப்பிரபுவின் வளர்ப்புத்தாயார் முதலிய உன் சிநேகிதிகள் யாரையும் உதவிசெய்யும்படி கேட்கவில்லையல்லவா?

தாய்:—எனதன்புள்ள மகளே! நான் அவர்களனைவரையும் கேட்டு ஆகிவிட்டது. ஆனால் அவர்களால் இச்சமயத் தில் உதவிசெய்ய முடியவில்லை. நான் துணையின்றி வருந்தி மிகத் துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன். அந் நிலையில் இன்றுமாலை இளவரசர் என்னிடம் நீ மிக அழ காய் இருப்பதாகவும், உன்னை அவர் நேசிப்பதாகவும், நீ அவர் விருப்பத்துக்கிணங்கினால் உனக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்வதாகவும், உனக்குத் தக்க ஒருவரைத்தேடி விவாகம் செய்துவைப்பதாகவும் கூறி னார். ஆகவே நீ மதனவல்லியைப்போல் அவ்வளவு

உயர்ந்த பதவியை நீயும் அடையலாம். ஆதலின் நீ சமயத்துக்குத் தக்கபடி புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ளமாட்டாயா?

மகள்:—போதும்; அம்மா! நான் திடீரென்று ஒருவித தீர்மானத்துக்கு வந்துவிட்டேன். அதாவது இளவரசர் உன் இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட்டால் போதும்.

தாய்:—எல்லாம் முன்னமே உன்னிடம் சொல்லியிருக்கிறேனல்லவா? அப்படியானுல் நீ ஒத்துக்கொண்டாய் போதும்!

மகள்:—ஆம்; நான் ஒத்துக்கொண்டேன். நாம் இருவரும் அழிந்துபோவதைவிட இவ்வாறு நடந்துகொள்வதே நலமெனத் தோன்றுகிறது. நாம் பரம ஏழைகளாய்ப் போவதைவிட என் உணர்ச்சிகளை நான் தியாகம்செய்து விடுவதே நலமெனக் கருதுகிறேன்.

தாய்:—இப்போதுதான் நீ அறிவுள்ளமாதைப்போல் நடந்து கொள்கிருய். ஆனுல் இளவரசர் உன் அறைக்குவரும் போது சலவைக்கல் சிலையைப்போல் அசைவற்று நின்றுவிடாமலும், உணர்ச்சியற்றவள்போல் நடந்து கொள்ளாமலும் சந்தோஷமாகவும் புன்சிரிப்புடனும் வரவேற்பாயென்று நம்புகிறேன்.

மகள்:—என்னைவிடு. என்னைவிடு. இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பெற்றோரின் வாயினின்றும் கேட்பது மிக்க வருத்தம் தரக்கூடியதா யிருக்கிறது. விவரமெல்லாம் எனக்கு வேண்டாம். என்னை நான் தியாகம் செய்து கொள்கிறேன்.

இதைக்கேட்ட தாயார் தன் மகளுடைய கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு இவ்விஷயத்தை இளவரசரிடம் சொல்லும்பொருட்டு மிக அவசரத்துடன் அவர் தங்கியிருக்கும் அறைக்குச் சென்று அங்கு மிக ஆவலுடன் அவள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த இளவரசரிடம் விவரத்தைக் கூறிவிட்டாள். பத்மாட்சியின் தாயார் அவ்வறையைவிட்டுச் சென்றதும் அவள் தன் அழகிய ஆடை ஆபரணங்களையெல்லாம் கழற்றிவிட்டு உபாயமான உடைகளை யணிந்து விதியின்படி என்ன நடக்கிறதோ நடக்கட்டுமென அதைப்பற்றி துக்கமோ சந்தோஷமோ கொள்ளாமல் தன் படுக்கையில் படுத்துத் தன் தலைமயிரை அவிழ்த்துப் போட்டுக்கொண் டிருந்தவண்ணம், தன் தாயின் செயலைக் கண்டு வெறுப்புற்றவளாய்த் தன்கரங்களிரண்டையும் கோத்துக்கொண்டு அப்படியே இளவரசரின் காமநோய்க்கு இறையாவதெனத் துணிந்து இருந்தாள்.

அதே சமயத்தில் அவ்வறையின் கதவு திறக்கப்பட்டது. இளவரசர் உள்ளே நுழைந்தார். அவருடைய பார்வை பத்மாட்சியின்மீது சென்றதும் அப்படியே அவளுடைய அழகையெல்லாம் விழுங்கி விடுபவர்போல் உற்றுநோக்கினர். அவருடைய கண்கள் சிறிது நேரத்துக்குள் அவளுடைய அங்கங்கள்மீதெல்லாம் பாய்ந்து ஆங்காங்குள்ள அழகைக் கண்டு களித்தன. முதலில் அவளுடைய முகத்தையும், பிறகு உறுதியுடன் கூடிய புஜங்களையும், மார்பினின்றும் பெருத்து முன் தோன்றியிருந்த இரு அழகிய ஸ்தனங்களையும், இருகரங்களையும் பார்த்து அளவிலா ஆனந்தமடைந்தார். உடனே இளவரசருக்கு காமாக்கினி கொழுந்துவிட்டெரியலாயிற்று. அவர் அவள் படுத்திருந்த கட்டிலின்மீது பறந்து சென்று உட்கார்ந்துகொண்டு அவளைத் தன் மார்போ

டணைத்து ஆலிங்கனம் செய்துகொண்டு ஏதோ சில இனிய பதங்களை உச்சரித்துக்கொண்டே அவள் அங்கங்களிலெல்லாம் கணக்குவழக்கு இல்லாத முத்தங்களை நிரப்பிவிட்டார்.

---

## 106-வது அத்தியாயம்

மறுநாள் விடியற்காலை இரண்டு மணிக்கு இராணியாரின் அரண்மனை முழுதும் நிசப்தமாக இருந்தது. பத்மாட்சி கன்னிகை என்னும் பெயருடையவளாயிருந்தாலும் இளவரசருடைய கரத்தில் முன் இரவைக்கழித்தாள். அந்த அறையில் இருந்த சிறுவிளக்கு மங்கலாக எரிந்து ஒரே படுக்கையில் இளவரசரும், அவரது அருகில் அவருடைய புதியகாதலியும் படுத்திருப்பதைக் காண்பித்துக்கொண்டிருந்தது. பத்மாட்சியின் முகத்தில் சந்தோஷமும் அவமானமும், இன்பமும் துன்பமும் கலந்தகுறிகள் காணப்பட்டன. அவள் மிக்க அயர்ச்சியுடன் தூங்கிக்கொண்டிருந்தாள். இளவரசரால் கொடுக்கப்பட்ட முத்தங்கள் காரணமாக அவள் உதடுகள் ஈரமடைந்ததும் உலரவில்லை. அவளுடைய ஒரு கரம் இளவரசனின் தலையின்கீழும் மற்றொருகரம் தன் தேகத்தின் மீதும் கிடந்தன. அப்படிப்பட்ட சமயத்தில் எங்கும் நிசப்தமாயிருந்தபோது யாரோ ஒருவர் நடந்துவருவதுபோல் கேட்டது. அப்படிவருவது யார்? எங்கிருந்து வருகிறார் என்றுதெரியவில்லை. எனினும் அவர் அடிமேல் அடிவைத்து இளம்பெண்களின் அறைகள் இருக்கும் தாழ்வாரத்தின் வழியாக வந்துகொண்டிருக்கிறார். அவர் நடுத்தர உயரமுள்ள வயோதிகராகவும், பழைய ஆடைகளை அணிந்தவராகவும், புத்திசுவாதீனமின்றி ஒருவகைப் பார்வையுடன் கூடியவராயும் இருந்தார். அந்த தாழ்வாரத்திலுள்ள அறைகளெல்

லாம் உட்பக்கம் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தபடியால் எல்லாவற்றையும் அவர் தொட்டுப் பார்த்துக்கொண்டே வருகையில் கடைசியில் தனியான இடத்தில் இருந்த பத்மாட்சியின் அறைக்கதவுமட்டும் தாழ்ப்பாளிடப்படவில்லை. இளவரசர் பத்மாட்சியுடன் இன்பம் அனுபவிக்கப்போகும் ஆவலில் கதவைத்தாழ்ப்பாளிடவும் மறந்துவிட்டார். மேலும் அவ்வறையிலிருந்த சிறுவிளக்கின் ஒளியும், கதவு தாழ்ப்பாளிடாததால் காணப்பட்ட சிறுசந்தின் வழியே வெளியிலும் சிறிது பிரகாசித்துக்கொண்டிருந்தது. எனவே அத்தாழ்வாரத்தில் வந்துகொண்டிருந்த அப்பெரியவர் அந்த அறையில்புகுந்து கதவைத் தாழ்ப்பாளிட்டுவிட்டுப் படுக்கையின் பக்கமாகப் போய்நின்றார். அப்படுக்கையில் இளவரசரையும், ராணியின் வேலைக்காரியான பத்மாட்சியையும் கண்டதும் அவர் ஏதேதோ பேசத்தொடங்கினார். அவர் பேசிய சத்தத்தைக்கேட்டதும் திடுக்கிட்டுப் படுக்கையிலிருந்த இருவரும் எழுந்திருந்தார்கள். தங்கள் இன்பத்தைக் கெடுத்தவர் மன்னர்பிரான் என்பதை யறிந்ததும் அவர்கள் இருவர் வாயினின்றும் அச்சம், கவலை, ஆச்சர்யம் முதலியவைகள் ஒருங்கே அமையப்பெற்ற பல சொற்கள் வெளியாயின. உடனே பத்மாட்சி அச்சத்தால் தன் தேகத்தைப் போர்வையின்கீழ் மறைத்துக்கொண்டு பேச்சுமூச்சில்லாமல் கிடந்தாள். ஆனால் இளவரசரோ "ஐயோ கடவுளே! என் தந்தையார்!" என்று அலறினார். நாம் முன் அத்தியாயத்தில் கூறியிருப்பதேபோல் அரசர் பூரண பைத்தியம்பிடித்தவராயிருப்பதால் எந்தவேளையில் எவ்வாறு நடந்துகொள்வாரோ என்னும் அச்சம் அவர்களுக்கு அதிகரித்துவிட்டது. அவர் அடித்துத் தொந்திரவுசெய்வாரோ அல்லது அங்கிருந்தே பலரைக்கூவி இரகசியத்தைப் பகிரங்கப்படுத்திவிடுவாரோ

என்னும் கவலை அவர்களுக்கு அதிகமாய்விட்டது. ஆகவே பத்மாட்சி அச்சத்துடன் போர்வையின்கீழ் மறைந்துகொண்டாள். இளவரசர் தன் தந்தையை மெதுவாக வெளியில் அனுப்பிவிடலாமென நினைத்து எழுந்திருந்தார்.

ஆனால் இளவரசரின் எண்ணத்தை அறிந்துகொண்டவரேபோல் அரசர், பைத்தியக்காரர்களுக்கு சகஜமாகவே காணப்படும் அபாரபலத்தால் இளவரசரை ஒதுக்கித்தள்ளி "ஐயா, சும்மாபடுத்துக்கொள்ளும். நான் இப்போது உன்னை இங்கே சந்தித்தது நல்லதாயிற்று. நீ இன்று இரவு இங்கே இருப்பாய் என அவர்கள் சொன்னார்கள். உன்னைக்கண்டு பேசவேண்டுமென்னும் ஆவல் எனக்கு பலகாலமாகவே மிக அதிகமாயிருந்தது. நான் வெளியில் உலாவும்போது நீ இங்கே வருவதில்லை. நீ இங்குவரும்போது என்னை என் சுற்றிலுமுள்ள மனிதர்கள் அடைத்துவிடுகின்றனர். ஆகையால் சும்மாபடுத்துக்கொள். நான் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே அருகிலிருந்த நாற்காலியைப் படுக்கையின் ஓரமாக இழுத்துப்போட்டுக்கொண்டு எதை எதையோ உளற ஆரம்பித்தார். ஆனால் அப்படுக்கையிலேயே பெண் ஒருத்தி படுத்திருப்பதை அவர் கவனிக்கவில்லை.

இளவரசர் முதலில் தன் தந்தை தன்னைக்குறித்தே இப்படிப் பேசுகிறாரோயென்று சந்தேகப்பட்டார். ஆனால் பின்னர் அவர் வேறு யாரையோ பார்த்துப்பேசும் தோரணையைப்போல் எங்கேயோ பார்த்துக்கொண்டே முன்பின் சம்பந்தமில்லாத பல விஷயங்களைப் பேசலானார். இவ்வாறு அரைமணி நேரம்வரை ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு திடீரென்று தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டெழுந்து தன் குமாரன் இளவரசரையும், அவரு

டன் இருந்த பத்மாட்சியையும் கவனியாமலும், அவர்களைப் பற்றி லட்சியம் செய்யாமலும் கதவைத் திறந்துகொண்டு வெளியில் சென்றார்.

இள:—நானும் என் தந்தையின்பின் செல்லவேண்டும்.

பத்மாட்சி:—ஐயோ கடவுளே! எச்சரிக்கையா யிருங்கள். இங்கிருந்து நீங்கள் வெளிச்சென்றதை யாரும் அறியாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

இள:—ஆம்; வாஸ்தவமே என்று கூறிக்கொண்டு தான் இப்போது எவ்வளவு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பதை நினைத்துக்கொண்டு உடனே கதவைத் தாளிட்டு மீண்டும் பத்மாட்சியின் படுக்கைக்குச் சென்று, "கண்ணே! யாருக்காகவும் உன்னைத் துறக்கமாட்டேன். இதோ இப்போது நாம் பிரியவேண்டிய காலம் வந்துவிட்டது" என்றார்.

பத்:—ஐயா, அரசர்பிரான் இங்கு வந்திருந்து ஏதேதோ பிதற்றியதையும், அவர் முகத்தையும் செயலையும் பார்த்தால் பயங்கரமா யிருக்கிறதல்லவா?

இளவரசன், "ஆம்; அதைப்பற்றி இனி நினைக்கவேண்டாம்," என்று கூறிக்கொண்டே அவள் கன்னங்களிலும் அதரத்திலும் பலமுத்தங்கள் தந்தான்.

இன்னும் சொற்பவார்த்தைகளால் இவ்வத்தியாயத்தை முடித்துவிடலாம். அரசர்பிரான் நற்காலவசத்தால் பத்மாட்சியின் அறையைவிட்டதும் வேறெங்கும் சென்று எத்தகைய குழப்பமும்செய்யாமல் தன் அறைக்குப்போய்ச் சேர்ந்தார். ஆகவே இளவரசர் வேறு எப்படிப்பட்ட தொந்திரவுமின்றி அந்த இரவின் மற்றப்பாகத்தையும் பத்மாட்சியின் கரங்களில் ஆனந்தமாகக் கழித்துவிட்டு அதிவிடியற்காலையில் யாருக்கும்

தெரியாமல் அவ்வறையைவிட்டுப் புறப்பட்டுத் தன் அறைக்குச் சென்ருர்.

மறுநாள் காலை ஆகாரத்துக்காக ராணியாரின் அரண்மனையிலுள்ள அனைவரும் கூடியபோது இளவரசரும் பத்மாட்சியும் சந்தித்தனர். இளவரசர் அவளைப்பார்த்து, முன் நாள் இரவு அவளது கரத்தில் ஆனந்தமாய்க் காலங்கழித்ததற்காக நன்றி செலுத்துவதுபோல் கண்களால் சைகை செய்தார். அவள் தான் ஏதோ குற்றம்செய்தவள்போல் காண்பித்துக்கொண்டாள். எனினும் அவளுடைய கற்புக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டபடியால் இனியும் அதைப்பற்றி வருத்தப்படுவதில் பயனில்லையென்றும், எவ்வளவு தந்திர சூழ்ச்சிகளால் பெருமிதமான செல்வத்தையும் செல்வாக்கையும் கைப்பற்றமுடியுமோ அவ்வளவையும் பெற்றுவிடுவதென்றும் தீர்மானித்தாள். காலை ஆகாரம் சரியாகமுடியுமுன் இரத்தினபுரி மாளிகையினின்றும் வந்துசேர்ந்த ஒரு ஆள் சொன்ன ஒரு செய்தியைக்கேட்டு இளவரசர் திடுக்கிட்டுப் போனர்.

அதைக்கண்டு அஞ்சிநடுங்கிய ராணியார், தன் மகனை நோக்கி அவர் அவ்வாறு திடுக்கிட்டுப்போனதற்குக் காரணம் யாதென விசாரித்தார். அதற்கு இளவரசர் இரத்தினபுரி ராஜ்யத்துக்கு எதிரியான மற்றொருதேசத்துமன்னர் சொற்ப காலமாக எங்கேயோ மறைந்திருந்து மீண்டும் இப்போது வந்திருப்பதாயும், ஆதலின் அவரால் இரத்தினபுரிக்கு எத்தகைய ஆபத்தும் வாராதபடி காப்பாற்றிக்கொள்ளவேண்டியிருக்கிறதென்றும் கூறினர். இதைக்கேட்டு காலை ஆகாரத்துக்கு உட்கார்ந்திருந்த அனைவரும் அச்சத்தால் நடுக்கங்கொண்டனர்.

# 107 - வது அத்தியாயம்

நேயர்காள்! இப்போது நாம் பரிதிபுரத்தில் கர்னல் மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் என்ன செய்கிருர்கள் என்பதைக் கவனிப்போம். முன்பு நாம் அவர்களிருவரும் குமாரவேல்பிரபு தங்கியிருந்த அறையில் சந்தித்து எப்படித் தங்கள்காரியத்தைச் சாதிப்பதென யோசித்துக் கொண்டிருந்தனர் என்று தெரிவித்ததை நேயர்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அவ்வாறு சந்தித்து இப்போது ஒரு மாதமாய்விட்டது. மீண்டும் அவர்கள் இருவரும் குமாரவேலின் அறையிலேயே காலை எட்டுமணிக்குச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

மாரப்பன்:—குமாரவேலரே! இறுதியில் என்ன செய்வதென்று யோசனைகூறுகிறீர்.

குமாரவேல்:—ஆம்; நமதுநிலைமை மிகச் சங்கடமானதாகவே இருக்கிறது. மதனவல்லியோ அடிக்கடி கடிதம் எழுதி நமது காரியம் விரைவில் முடியவேண்டுமென வற்புறுத்துகின்ருள்.

மாரப்:—எனக்கும் அவ்வாறுதான் எழுதுகின்ருள். அதிலும் கடைசி முறையாக எழுதியுள்ள கடிதத்தில் நான் உண்மையில் எந்த வேலையும் செய்யாமல் ஏதோ சூழ்ச்சி செய்வதாகக் கண்டித்திருக்கின்ருள்.

குமார:—என்னையும் அவ்வாறே கண்டிருக்கின்ருள். ஜானகியிடமிருந்து எத்தகைய ரகசியத்தையும் வெளியாக்கவோ அல்லது அவளை என்னுடன் வெளியேறி விடும்படி வற்புறுத்தவோ முடியவில்லையென்று நான் அறி

விப்பதை அவள் சிறிதும் நம்பாமல் நான் ஏதோ வீண் காலங் கழித்துக்கொண்டிருப்பதாகக் கருதுகின்ருள்.

மாரப்:—எனக்கும் அவ்வாறே எழுதுவதுடன் நான் விரைவில், இளவரசிக்கு எதிரிடையாகச் செய்யப்பட்டுவரும் சூழ்ச்சியை நசுக்கவேண்டுமென்றும் இன்றேல் நான் ஏற்றுக்கொண்ட வேலையை விட்டுவிடலாமென்றும் அப்படி விட்டுவிடுவதாயின் மறுபடியும் நான் மீண்டும் மதனவல்லியின் எதிரில் வரக்கூடாதென்றும் கண்டிப்பாக எழுதி யிருக்கின்ருள்.

குமார:—என் விஷயத்தில் மதனவல்லி அப்படிச் சொல்லா விட்டாலும் நான் ஏற்றுக்கொண்ட காரியத்தை விரைவில் முடிக்காவிட்டால் அவள் இனி என்னை அதைப் பற்றி விசாரிக்கமாட்டாளென்றும், இன்னும் சொற்ப காலத்துக்குள் இளவரசிக்கு எதிரிடையாகச் செய்யப் படும் சூழ்ச்சி தானுகவே முறிந்துவிடுமென்றும் அறிவித்திருக்கின்ருள்.

மாரப்:—ஆம்; அவள் துரிதப்படுத்துவது வாஸ்தவந்தான். இதற்கு என்னசெய்வது? அம்புஜம் என்மனம் திருப்தியடையும்படி அவளிடமிருந்து எத்தகைய இன்பத்தையும் நான் அனுபவிக்கும்படி அனுமதிப்பாள். ஆனல் அச்சகோதரிகளிடையே நடைபெற்று வரும் ஏதோ இரகசியத்தை அறிவிப்பதற்குமட்டும் அவள் சிறிதும் சம்மதப்படமாட்டாள். அவளிடம் ஏதோ இரகசியம் இருக்கிறதென்றும், அதை அவள் சொல்லித்தான் ஆகவேண்டுமென்றும் நான் கேட்கும்போதெல்லாம் என்னைக்கண்டு அவள் பரிகாசமுறையில் சிரிக்கின்ருள். அல்லது என்னுடன் வெளியேறி விடும்படிசொன்னல் இன்னும் அதிகமாக வயிறு வெடிக்கும்படி சிரித்து

என்மீசையை இழுத்தும் முதுகின்மீது தட்டிக்கொடுத்தும் அவள் கர்ப்பந்தாங்கினுல் அப்போது ஓடி வந்து விடுவதாகச் சொல்லியும் பரிகாசம் செய்கிருள்.

குமார:—என் அன்புக்களஞ்சியம் ஜானகி அப்படியெல்லாம் மீசையை இழுத்தும் முதுகில் தட்டிக்கொடுத்தும் பரிகாசம் செய்வதில்லை. ஆனல் சிறிது உண்மையாகவும், சிறிது பொய்யாக மேலுக்கும் அழுவதும் கெஞ்சிக் கொள்வதும் மரியாதையாகக் கண்டிப்பதுமாக நடந்து கொள்கிருள். ஏனெனின், அவள் என்னை நேசிக்கிருள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனல் அவள் இச் சூழ்ச்சி நாடகத்தில் ஏதோ ஒருபாகம். நடிக்கவேண்டியதா யிருக்கிறதல்லவா?

மாரப்:—அவள் சொன்னபடியே ஒருமாதம் தவணைகொடுத்தால் அவள் உன்னுடன் நிச்சயமாக வெளியேறிவிடுவாள் என்று நம்பினேன். ஆனல் இப்போது அவ்வாறு கூறி ஒருவருஷ மாய்விட்டதே.

குமார:—ஆம்; ஆனல் நேற்றிரவு நாங்கள் ஒரு அற்புத சம்பவத்தைக்கண்டோம்.

மாரப்:—அற்புத சம்பவமா?நான் நேற்றுக்கு முன்னாள் இரவு கண்ட அற்புதசம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. நான் நேற்று உன்னைச் சந்திக்காததால் அதைப்பற்றிச் சொல்லமுடியவில்லை. இன்றும் வேறுவிஷயம் பேசுவதில் அதிககவனம் செலுத்தியதால் அவ்விஷயம் என் ஞாபகத்துக்கு வரவில்லை.

குமார:—அப்படியானல் நீதான் முதலில் அற்புதசம்பவத்தைக் கண்டதால் நீயே அதை முதலில் விவரிக்கவேண்

டியது நியாயமாகும். இதோ இந்த பானத்தைக்குடித்து விட்டு விஷயத்தைச்சொல்.

மாரப்:—முந்தாநாள் இரவு பதினொருமணிக்கு நான் இள வரசியின் மாளிகையிலுள்ள தோட்டத்தைச் சுற்றிலு மிருக்கும் மதில்சுவர்மீது ஏறி உள்ளேகுதித்ததும் என்னை அம்புஜம் வரவேற்றுளென்றாலும், அப்போது மிக்க இருட்டாயிருந்தபடியால் அவள் உருவத்தை நான் பார்க்கமுடியவில்லை. எனினும் அவள் பேசிய குரலாலும் நடந்துகொண்ட நடத்தைகளாலும் அம் புஜமே அவள் என்று நிச்சயித்துக்கொண்டேன். மேலும் வேறு யார் என்னை அவ்வளவு ஆவலுடன் வரவேற்று தோட்டத்தின் வழியே உள் அறைக்கு அழைத்துக்கொண்டு போகக்கூடியவர்?

குமார:—அந்த வழிகளெல்லாம் எனக்கும் நன்றாகத்தெரியும். நீ அவள் அம்புஜமோ அல்லவோ என்று சந்தேகிக்க வேண்டிய காரணம் என்ன?

மாரப்:—என்காதலி அத்தோட்டத்தின் வழியாக என்னை அழைத்துக்கொண்டு மிக அவசரமாகப்போனபோது அவள் வெல்வெட்டில் சரிகைகள்வைத்துத் தைத்த அங்கியொன்றை அணிந்திருந்தது என்கண்ணில் தென் பட்டது.

குமார:—ஆம்; நானும் அத்தகைய சந்தர்ப்பத்தைப் பார்த் திருக்கிறேன். ஆகவே நான் ஆச்சர்யப்பட்டதைப் போலவே நீயும் ஆச்சரியப்பட்டிருப்பாய். சரி; விவ ரத்தைச்சொல்.

மாரப்:—நான் இரத்தினபுரி இளவரசி அப்படிப்பட்ட ஆடையை அணிவதைப் பார்த்திருப்பதால் எனக்கு

அந்த ஞாபகம்வந்ததும் ஏதோ ஒருவிதமான அச்சம் தோன்றிற்று. மேலும் நான் அம்புஜம் என்று நினைத்த அம்மாது இளவரசி அணியும் இதர சிலவிசித்திர ஆடைகளையும் அணிந்திருந்ததால் என் சந்தேகம் அதிகரித்துவிட்டது. ஆகவே நான் அவளைப்பார்த்து, "நீ அம்புஜம்தானு" என்று கேட்டேன். அதற்கு அவள், "ஆம்; அதிலென்னசந்தேகம், என்னை நீ பிசாசு என்று நினைத்துவிட்டாயா" எனக் கூறிக்கொண்டே சென்றதால் சிறிதுநேரத்துக்கெல்லாம் மாடியின் படிக்கட்டுகளைத் தாண்டி சதா சிறுவிளக்கு எரிந்துகொண்டிருக்கும் தாழ்வாரத்தில் சென்றோம். அங்கு பல அறைகள் இருக்கின்றன அல்லவா? அங்குசென்றதும், "வா, போவோம்" என்று சொல்லிக்கொண்டே அவள் என்னை இழுத்துச்சென்றாள். அப்போது அத்தாழ்வாரத்தின் ஒரு மூலையிலிருந்த ஓர் அறையினின்றும் யாரோ ஒருமாது எட்டிப்பார்த்து நாங்கள் செல்வதைக் கண்டதும் திடீரென்று உள்ளே நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டுவிட்டாள். அதனுல் எனக்கு அச்சமும், சந்தேகமும், ஆச்சர்யமும் அதிகமாய்விட்டது. எனினும் சிறிதுநேரத்துக்கெல்லாம் நாம் அவள் அறையில்புகுந்து கதவைச் சாத்திக்கொண்டுவிட்டோம். அப்போது நான், "நம்மை யாரோ பார்த்துவிட்டார்கள்" என்றுகூறினேன். அதற்கு அவள், "ஓ, இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றாள். பிறகு நான் அவள் ஏன் இளவரசியின் உடையை அணிந்துகொண்டிருக்கிறாள் எனக்கேட்டதற்கு அவள் முதலில் அது தன்னுடையதென்று கூறிவிட்டுச் சிறிதுநேர ஆலோசனைக்குப் பின்னர், இளவரசி தன் பழைய ஆடைகளையெல்லாம் அவளைப்போன்ற தோழிகளுக்குக் கொடுத்துவிடுவதாகவும்,

அதுவும் அப்படிக் கொடுக்கப்பட்டதேயென்றும் கூறினள். அவள் கூறியகாரணம் நியாயமாக இருந்தாலும், அறையில் சென்றபிறகு அவளுடன் இன்பம் அனுபவிப்பதிலேயே கவனம் சென்றுவிட்டபடியாலும் பிறகு நான் அதைப்பற்றிப் பேசவில்லை. பிறகு நான் மறுநாள் காலை தனியாக ஆகாரத்துக்கு உட்கார்ந்திருந்தபோது தான் எனக்கு அந்த ஞாபகம்வந்தது. நான் ஒவ்வொன்ருக எல்லாவிஷயங்களையும் சிந்தித்துப்பார்த்தேன்.

குமார:—சரிதான் நீ கண்ட அந்த அற்புத சம்பவத்தின் விவரத்தைப்பற்றி நீ உண்மையில் நினைப்பதென்ன?

மாரப்:—அம்புஜம் என்னைத் தன்காதலனைக்கொண்டு தான் இன்பம் அனுபவித்துக் கொண்டே அதன் மூலம் இளவரசியின் மீதும் பழி சுமத்தப்பார்க்கிருள். இளவரசியின் ஆடைகளையே அணிவதால் பார்க்கிறவர்கள் இளவரசியே தன் காதலனை மாளிகையில் அழைத்துச்செல்கிருளெனச் சந்தேகிக்கட்டும் என்பதே இதன் நோக்கமாய் இருக்கவேண்டும். நாங்கள் இருவரும் செல்லும் போது எங்களைக்கண்டதும் தன் தலையை உள்ளே இழுத்துக்கொண்டவள் இளவரசியின் மீது சுமத்தப்படும் பழியைத்தான் பார்த்ததாகச் சாட்சி சொல்ல நியமிக்கப்பட்டவளாயிருக்கவேண்டும் என்று முதலில் நினைத்தேன். இப்போது நீர ஆலோசித்த பின்னரும் அதுவே உண்மையான காரணமாகவும் இருக்கவேண்டுமென்று நிச்சயிக்கிறேன்.

குமார:—நேற்றிரவு நான் கண்ட அனுபவமும் நீ சொன்ன நிச்சயத்தையே உறுதிப் படுத்துகின்றது. நேற்றிரவு சுமார் பதினெரு மணிக்கு முன்னரே நானும் ஜானகியும் செய்துகொண்ட முன்னேற்பாட்டின்படி இளவரசியின்

மாளிகையைச் சேர்ந்த தோட்டத்தில் சென்றதும் அங்கு என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஜானகி என்னை அன்புறத் தழுவிக்கொண்டு முத்தமிட்டு வரவேற்றாள். அவள் மிக்க அழகானவளென்றும், என்னிடம் அதிக நேசத்துடன் நடந்து கொள்கிறாளென்றும் முன்னமே சொல்லி யிருக்கிறேனல்லவா? அவள் நடிப்பதில் பாதிதான் உண்மையென்றும் பாதி வெறும்வேஷமென்பதையும் நான் அறிவேனாயினும் அவளை நேசியாமலிருக்க என்னால் முடியவில்லை. நான் நேற்று இரவு அவளைச் சந்தித்தபோது அவள் என்னுடன் வெளியேறி விடுவதாக உறுதி கூறினாலொழிய அவளுடன் மாடிமீதுள்ள அவள் அறைக்குச் செல்வதில்லை யென்று தீர்மானித்திருந்தேன். எனினும் அவள் செய்த சாச சல்லாபங்களாலும், மிக்க அன்புடன் நேசிப்பதேபோல நடந்துகொண்டதாலும் என் உறுதியை நான் மறந்து அவள் பின் செல்லலானேன். சிறிது தூரம் சென்றதும் அதாவது இருட்டான படிக்கட்டு வழியே செல்லுகையில் அவள் சற்று நின்றாள். அப்போது அவள் வேறு உடையை மாற்றிக்கொள்வதாகத் தெரிந்தது. உடனே அவள் என் கையைப் பற்றிக்கொண்டு அழைத்துச் சென்றாள். சிறிது நேரத்திற்கெல்லாம் படிகளைக் கடந்து சிறு விளக்கு எரிந்து கொண்டிருக்கும் தாழ்வாரத்துக்கு வந்தோம். அப்போது நான், அவள் தோட்டத்தில் சந்தித்தபோது அணிந்திராத வேறு வெல்வெட்டில் சரிகை தைத்த விலையுயர்ந்த ஆடை அணிந்திருந்ததைக்கண்டு ஆச்சர்யமடைந்தேன். அவ்வழியே நாம் இருவரும் போய்க் கொண்டிருக்கையில் நீ முன் கூறியபடியே தாழ்வாரத்

தின் கடைசியிலிருந்த ஓர் அறையிலிருந்து ஒரு மாது வெளிவந்து எங்களைக் கண்டதும் மீண்டும் திடீரென்று உள்ளே நுழைந்துகொண்டு கதவைச் சாத்திக்கொண் டாள். அவள் இளவரசியின் வேலைக்காரிகளில் வய தான ஒருத்தியாக இருக்கவேண்டுமென்று நினைக்கி றேன். உடனே நாங்கள் ஜானகியின் அறையை யடைந் ததும் அவள் கதவைச் சாத்திக்கொண்டு விலையுயர்ந்த அந்த ஆடையைக் கழற்றிவிட்டு என்மீது பாய்ந்து முத் தங்களாலும் சரச சல்லாபங்களாலும் என்னை ஆனந்த சாகரத்தில் அழுத்தினாள். நானும் இவ்விஷயங்களை யெல்லாம் ஒருவாறு யூகித்தறிந்து கொண்டேன். இள வரசியின் மீது பழியைச் சுமத்துவதற்கு அவள் என் னையே ஒரு கருவியாக உபயோகிப்பது கண்டு கோப மும் ஆச்சர்யமு மடைந்தேன். எனினும் நான் என் உணர்ச்சியை அவளிடம் எவ்வகையிலும் காட்டிக் கொள்ளாமல், "ஜானகி! ஏன் இந்த வேஷத்தைப்போட் டுக்கொண்டாய்" என்று ஒன்றும் தெரியாதவன்போல் கேட்டேன். அதற்கு அவள், "மற்றவர்கள் என்னை அறிந்து கொள்ளாம லிருக்கும்பொருட்டு" என்று பதி லளித்தாள். ஆனால் நான் அந்த ஆடையாபரணங்கள் இளவரசியினுடைய தல்லவா என்று கேட்டேன். அதற்கு அவள் சிறிதும் தாமதமின்றி, "இல்லை, அவை என்னுடையதே. இளவரசியின் பழைய ஆடைகளை அவளுடைய தோழிகளாகிய நாங்கள் தானே பெறு வோம்," என்று சாதுர்யமாக விடையளித்தாள். ஆயி னும் நான், "நீங்கள் பழைய ஆடைகளைப் பெறுவ தாகவே வைத்துக்கொண்டாலும் இம்மாதிரி வேளை யில் இத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த ஆடை களை அணிவது தவறு அல்லவா?" என்று வினவினேன்.

அதற்கு விடையளிக்க முடியாமல் ஜானகி கண்ணீர் விட்டு அழுதுகொண்டே தான் தெரியாமல் செய்து விட்டதற்காக மன்னிக்கவேண்டுமென்றும் அதைப் பற்றிப் பேசலாகாதென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவள் ஏதோ மோசம்செய்து வருகிறுள் என்பதை நான் அறிந்துகொண்டதால் அவள் எனக்குப் பலவகைகளாலும் இன்பமூட்டினுலும் அதை நான் லட்சியம் செய்யாமல் மீண்டும், "நாம் வரும்போது யாரோ ஒரு மாது பார்த்துவிட்டாளல்லவா?" என்று கேட்டேன். அதற்கு அவள், "அவள் எங்களுடன் இரத்தினபுரியிலிருந்து வந்த வண்ணுத்தி சுவர்ணம். அவள் எதையும் வெளிவிடமாட்டாள்," என்றுள். நான் அவள் எப்படி அவ்வாறு நம்பலாமென்றும், ஒரு கால் இளவரசியே யாரோ ஒரு காதலனை அழைத்து வருவதாக அவள் சந்தேகித்துப் புகார் கிளப்பிவிட்டால் என்ன செய்வதென்றும் நான் கேட்டேன். அதற்கு அவள், "ஆம், அதெல்லாம் எனக்குத் தெரியும். இளவரசிதான் அவ்வாறு வருகிறுளென வண்ணுத்தி சுவர்ணம் நினைக்கவேண்டுமென்பதுதான் என் எண்ணம். ஏனெனின் அப்போதுதான் இரகசியம் வெளியாகாது," என்று கூறினுள். மேலும் அவள் இளவரசி தன் காரியதரிசி பலராமனையே வைத்துக் கொண்டிருப்பதாகவும், மற்றும் பல கள்ளக் காதலர்களையும் மாளிகையில் சேர்த்துக்கொள்வதாகவும், வண்ணுத்தி சுவர்ணம்தான் இளவரசியின் அந்தரங்க விஷயங்களையெல்லாம் அறிந்தவள் என்றும், தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவே ஜானகி இளவரசியின் உடையை அணிந்துகொண்டதாகவும், அதனுல்

இளவரசிக்கு எத்தகைய கஷ்டமும் நேராதென்றும் கூறினாள்,

மாறப்:—இப்படிப்பட்ட குயுக்தியான யோசனையைக்கேட்டு நீ என்ன சொன்னாய்?

குமார:—நான் சொல்வதென்ன? அந்த விஷயத்தைப் பற்றி அதிகமாகப் பேசினால் ஜானகிக்கு மனக்கஷ்டம் வரும் போல் இருந்தது. ஆதலின் அதைப்பற்றிப் பேசுவதை விட்டு அவள்கேட்ட ஒருமாதத் தவணை முடிந்துவிட்ட தென்றும் ஆதலின் அவள் விரைவில் என்னுடனாவது வெளியேறிவிட வேண்டும்; அல்லது என்னைவிட்டுப் பிரிந்து பரிதிபுரத்தில் இளவரசி மாளிகையில் இருக்க வேண்டும் என்று கூறினேன். உடனே அவள் சரச சல்லாபங்களைச் செய்வதும், மன்னிப்புக் கேட்டுக்கொள்வதும், கெஞ்சிக் கூத்தாடுவதுமாக ஆரம்பித்தாள். ஆயினும் நான், இனி என்னால் இத்தகைய வாழ்க்கை வாழமுடியாதெனக் கண்டிப்பாக அறிவித்துவிட்டேன். எனினும் அவள் சரியான பதிலைத்தராமல் ஏமாற்றி வருகிறாள். அவள் தன் காம இச்சையைப் பூர்த்தி செய்துகொள்ளவும், இளவரசியின்மீது பழி சுமத்தவும் என்னை ஒரு கருவியாக உபயோகித்துக் கொள்கிறாள் என்று நன்கு தெரிந்துவிட்டது.

மாறப்:—குமாரவேல் பிரபுவே! நீ சொல்வதைப் பார்த்தால் ஜானகியும் அம்புஜமும் பரஸ்பரம் கலந்தாலோசித்து தான் காரியங்களை நடத்துவதாகத் தெரிகிறது. நமது விஷயமும் அதாவது ஜானகி உன்னை மோகிக்கிறாளென்பது அம்புஜத்துக்கும், அம்புஜம் என்னை மோகிக்கிறாளென்பது ஜானகிக்கும் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன்.

குமார:— ஆனால் நீயும் நானும் சந்தித்து இவ்விஷயங்களை யெல்லாம் பேசுகிறோமென்பதை அவர்களிருவரும் அறியமாட்டார்கள். ஆகவே நாம் இங்கு முக்கியமாக எந்த நோக்கத்துடன் வந்திருக்கிறோமென்பதும் அவர்களுக்குத் தெரியாது. மேலும் நாம் அவர்களுடைய அழகைக்கண்டு மோகித்து அதற்காக அவர்களிடம் சரணாகதி யடைந்திருக்கிறோமென்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களே யொழிய அவர்களுடைய சதியாலோசனையை அழிக்கவே நாம் வந்திருக்கிறோமென்பதை அவர்கள் அறியவில்லை.

மாரப்:— அவர்கள் எதை அறிந்திருக்கிறார்கள் எதை அறியவில்லையென்பதை எல்லாம்வல்ல இறைவன்தான் அறிய வேண்டும். அப்பா! அவர்களுடைய சூழ்ச்சியையும், தந்திரத்தையும், வஞ்சனையையும் போன்ற கொடுமையை நான் இதுவரை எங்கும் கண்டதில்லை. அவர்கள் இருவரும் அனுஷ்டிக்கும் நடவடிக்கைகளைப்பார்த்தால் இருவரும் எல்லாவிஷயங்களையும் கலந்தாலோசித்தே செய்கிறார்களென்று நிச்சயமாகத் தெரிகிறது.

குமார:— இதனாலேயே நாம் இருவரும் கலந்தாலோசித்தே நமது காரியங்களைச் செய்கிறோமென்பதை அவர்கள் அறியவில்லையென்றே தெரிகிறது.

மாரப்:— ஆம்; அப்படித்தான் தெரிகிறது. ஆயினும் நாம் இவ்வாறு வியாக்யானம் செய்துகொண்டிருப்பதில் பயனில்லை. அப்பெண்களுடைய சதியாலோசனையைக் கெடுக்கமுடியாமலிருப்பதுடன் அதற்குத் துணையாகவும் இருக்கிறோம். ஆகவே இத்தகைய சங்கடமான நிலைமையில் நாம் யாது செய்யவேண்டுமென்பதுபற்றி யோசிப்போமாக.

குமார:—எனக்கொன்று தோன்றுகிறது. அதாவது என் சம்பந்தப்பட்ட வரையில் இனியும் நான் அம்மாதினுடைய மோகவலையில் சிக்கிக்கொண்டு அவளிஷ்டப்படி கூத்தாடச் சிறிதும் சம்மதிக்கவில்லை. ஏதேனும் ஒரு முடிவானதிட்டத்தின்படி வேலைசெய்ய ஆரம்பித்து அதை மதனவல்லிக்கும் அறிவித்துவிட விரும்புகின்றேன். மேலும் விரைவில் இரத்தினபுரிக்குப்போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்றும் ஆவலாய் இருக்கிறேன்.

மாரப்:—நானும் இவ்வாறு செய்வதே சரியெனக் கருதுவதால் நீ எப்படிப்பட்ட முறையை அனுஷ்டிக்கலாமென யோசனைகூறுகிருயோ அப்படியே செய்வதெனத் தீர்மானித்திருக்கிறேன். என்ன யோசனை சொல்லப் போகிறாய்?

குமார:—அம்புஜம், ஜானகி ஆகிய இருசகோதரிகளையும் பலாத்காரப் பிரயோகத்தாலேனும் தூக்கிக்கொண்டு போய்விடுவதே சரியானகாரியமெனக் கருதுகிறேன்.

மாரப்:—ஆம்; அவ்வாறு செய்வதென்பது நல்ல யோசனையாகத்தான் தெரிகிறது. ஆயினும் நானும் நீயும் மட்டும் அப்படிப்பட்ட சிரமமானவேலையைப் பிறர் துணையின்றிச் செய்யமுடியுமோ?

குமார:—நம்மால்மட்டும் முடியாதுதான். நான் இதைப்பற்றி முன்னமே யோசித்து அதற்கான சில ஏற்பாடுகளையும் செய்திருக்கிறேன். அதை இப்போது நான் உனக்குச் சொல்கிறேன்; பார். சுமார் ஐந்துவாரங்களுக்குமுன் ஒருநாள் இரவு நான் இளவரசியின் மாளிகைக்குப் பக்கத்திலுள்ள பெரிய ஏரியின்கரைமீது உலாவிக்கொண்டிருந்தேன். அங்கே ஓரிடத்தில் மூன்றுபேர் கூடிக்

கொண்டு அதற்கு இரண்டுமூன்று தினங்களுக்குமுன் இறந்துபோன ஒருவரின் பிரேதத்தை வெளியே இழுத்துக்கொண்டிருந்தார்கள். நான் கேட்டகேள்விகளுக்கு அவர்கள் பதில்சொன்னபோது பேசியதைப் பார்த்தால் அவர்கள் விஷயத்தில் நான் தலையிடுவதை அவர்கள் விரும்பவில்லையென்று தெரிந்தது. ஆகவே நான் அவர்களுடைய பார்வையினின்றும் மறைந்து வேறோர் இடத்தில் மறைந்துகொண்டிருந்து அவர்களுடைய நடவடிக்கைகளைக் கவனித்துவந்தேன். அவர்கள் மறைவான ஓரிடத்திலிருந்து ஒரு குதிரைபூட்டிய வண்டியைக் கொண்டுவந்து அதில் அப்பிரேதத்தைப் போட்டுக்கொண்டு நகரின்பக்கமாக ஓட்டிச்சென்றதைக் கண்டேன். அவர்கள் என்ன செய்கிறார்களென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருந்தபடியால் அவர்களுக்குத்தெரியாமல் அவ்வண்டியின்பின்னேயே சென்றேன். குதிரையின் காலடிசத்தம் கேட்டுத்தான் அதன்பின் தொடரலானேன். இறுதியில் அவர்கள் ஒரு சிறுவீட்டில் நுழைந்தார்கள். அவ்வீட்டில் எரிந்துகொண்டிருந்த சிறு விளக்கைப் பார்த்தால் அது ஒரு டாக்டர்வீடாய் இருக்கவேண்டுமென்று தோன்றியது.

மாரப்:—சரிதான். இப்போது நீ சொல்லும் கதைக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?

குமார:—நான் இன்னும் சமாசாரத்தை முடிக்கவில்லையே; இதற்குள் உனக்கென்ன அவசரம்? ஜானகி என்னுடன் எளிதில் வெளியேறுவது அசாத்தியமென்றும், அப்பெண்ணை பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுசெல்வதே சரி என்றும், அதற்கு நீயும் உடன்படுவாய் என்றும்

எனக்குத் தோன்றியதால் பிறகு ஒருநாள் இரவு நான் அவ்வாறே அந்த ஏரிக்கரைமீது உலாவச்சென்றபோது நான் எதிர்பார்த்தபடியே அந்த மூன்று முரடர்களையும் கண்டேன். ஏனெனின் அதற்குச் சிலமணிநேரங்களுக்கு முன்புதான் ஒரு படகு கவிழ்ந்துபோய் நாலைந்துபேர் இறந்துபோயிருந்தனர். நான் அவர்களைக் கண்டதும் அவர்களுக்கு என்னிடம் அபிமானம் ஏற்படும்பொருட்டு நான் அவர்களுக்குச் சிறிது பணம்கொடுத்தேன். அப்போது நான் அவர்களிடம் தைரியமாகவும் பகிரங்கமாகவும் அவர்களுடைய நிலைமையை நான் அறிந்து கொண்டிருப்பதாகவும், அவர்களால் எனக்குச் சில காரியங்கள் ஆகவேண்டி யிருக்கிறதென்றும் கூறினேன். அவர்கள் :செய்யவேண்டிய காரியம் இன்னதென்று நிச்சயமாகச் சொல்லாமல் விரைவில் ஏதேனும் ஒரு நாள் இரவு நான் எந்தவேலையைச் சொன்னாலும் அவர்கள் செய்யவேண்டுமென்றும் அதற்காக நான் அவர்களுக்குப் பெருந்தொகை சன்மானம் செய்வதென்றும் பேசி முடித்திருக்கிறேன். அவர்களின் பெயர் வெறியன், தொம்பன், தொப்பன் என்பவையாகும்.

மாரப்:—பலே பேஷ்; நீ காரியத்தை ஒருவிதமாக முடித்து விட்டிருக்கின்றாய். ஆனால் சரி; இப்போது நாம் அதைச் செய்துமுடிக்கும் விவரத்தையும் வழியையும் கண்டு பிடிப்போம்.

நேயர்காள்! இப்போது நாம் கர்னல் மாரப்பனையும் குமாரவேல் பிரபுவையும் விட்டு வேறோரிடத்தில் நமது கவனம் செலுத்தவேண்டி யிருக்கிறது. அது என்னவென்று கவனிப்போமாக.

---

# 108-வது அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் கூறியபடி கர்னல் மாரப்பனும் குமாரவேல் பிரபுவும் பலாத்காரத்தாலேனும் தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதென யோசித்துக்கொண்டிருந்ததற்குச் சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் இரவு பத்துமணிக்கு ஆகாயம் முழுதும் கரியமேகம் பாவி இருந்தபடியால் அன்று நிலவுநாளாயிருந்தும் அதிக இருட்டாக இருந்தது. காற்று அதிகபலமாக அடித்துக் கொண்டிருந்தபடியால் இளவரசியின் மாளிகைக்கருகிலுள்ள ஏரியில் அலைகள் வேகமாகக்கிளம்பியதால் ஓவென்று சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. ஆகவே அந்தநேரத்தில் மிக்க அவசியமும் அவசரமுமான வேலையிருந்தாலொழிய யாரும் வெளியில் தலையும்காட்டமாட்டார்கள். எனினும் அப்படிப்பட்ட பயங்கரமான வேளையில் அம்மாளிகையின் பின்புறத்திலிருந்து பரிதிபுரம் ரஸ்தாவுக்குச்செல்லும் குறுக்குப் பாதையின் வழியே யாரோ ஒருமாது மிக அவசரமாக நடந்து சென்றுகொண்டிருந்தாள். அவள் யாரென்று நினைக்கிறீர்கள்? அவள் தான் மரகதவல்லியின் மூன்று குமாரிகளுடன் அவர்களுக்குத் துணையாக இளவரசியின் கூட்டத்தில் சேர்ந்துவந்த இராஜம்மாள் என்பவளே. அவள் கரிய ஆடைகளை அணிந்து கொண்டு முகமூடி ஒன்றையும் அணிந்துகொண்டு அந்நேரத்தில், முன்பு தான் ஏற்பாடுசெய்தபடி டாக்டர். மணவாளனை அழைத்துக்கொண்டு வருவதற்காகப் பரிதிபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அவள் டாக்டர் வீட்டுக்குச் சென்று அவரிடம் ஏதோ சில சங்கதிகளைக்கூறியதும் அவர் அவளுடன் புறப்படத் தயாரானர்.

அவர்கள் வெளியில் புறப்படுமுன் இராஜம்மாள் ஒருபட்டுத்துணியால் டாக்டரின் கண்களைக் கட்டிவிட்டு, "டாக்டரே! முன்னரே நீர் வாக்குறுதியளித்திருக்கிறபடி இந்தக் கட்டைச் சிறிதும் அப்புறப்படுத்தாமலும், எங்கு போகிறோமென்பதுபற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் ஆவல் சிறிதுமின்றியும் என்னுடன் வரவேண்டும்," என்றாள்.

அதற்கு டாக்டர், "நான் முன்னமே அளித்த வாக்குறுதியையே இப்போதும் கூறுகின்றேன். சோம்பேறித்தனமான ஆவல் ஏற்படும் வழக்கம் எனக்கில்லை. என் கண்களுக்குக் கட்டப்பட்டிருக்கும் கட்டையே அவிழ்த்துவிட்டாலும்கூட எனக்குப் பழக்கமில்லாதவழியே நீ அழைத்துச்சென்றால் அது எங்கே இருக்கிறது, எங்குச்செல்கிறது என்பதையும் அறிந்துகொள்ள ஆவலடையமாட்டேன். மேலும் இவ்விரவு இருள்சூழ்ந்திருக்கின்றதே!" என்றுகூறினர்.

இதற்கு இராஜம்மாள் எத்தகைய பதிலும் கூறுமல் டாக்டரின் கையைப்பிடித்துக்கொண்டு அவருடைய வீட்டினின்றும் அவரை நடத்திச்சென்றாள். அவள் அவரைப் பற்பல தெருக்களின்வழியே முதலில் அழைத்துக்கொண்டு சென்று இறுதியில் இளவரசியின் மாளிகைக்குச்செல்லும் சிறு நடைப்பாதையின் வழியே அழைத்துச்சென்றாள். ஆனல் டாக்டர் மணவாளனே வெளித்தோற்றத்தில் ஒன்றும் அறிந்துகொள்ள விருப்பமில்லாதவரேபோல் நடித்தாரேயொழிய தன்னை அழைத்துச்செல்வது எங்கே? தான் சிகிச்சைசெய்யப்போவது யாருக்கு என்னும் விஷயங்களை அறிந்துகொள்வதில் மிக ஆர்வமுடையவராயிருந்ததுடன் எப்படியாவது மர்மங்களை அறிந்துகொண்டுவிட்டால் அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவர்களிடமிருந்து பணத்தைப்பறிக்கவும் வழி ஏற்படுமென்றும் கருதினர். ஆகவே

அவர் தன் விஷயங்களை இராஜம்மாள் அறியாளென்றும், தான் உண்மையானவரென்று அவள் கருதியிருப்பாளென்றும் அறிந்துகொண்டார். வலதுகரத்தை அவள் பிடித்துக் கொண்டிருந்தபடியால் இடதுகையால் அவர் தன் கட்டைச் சிறிது தளர்த்திவிட்டார். இதனால் நிலாவெளிச்சம் சிறிது தெரிந்தபோதெல்லாம் அவர் எந்த ரஸ்தாவின் வழியாக அழைத்துச்செல்லப்படுகிறார் என்பதை அறிந்துகொண்டார். பரிதிபுரத்துக்கு வெளியிலுள்ள ஒரு அழகியமாளிகையில் இரத்தினபுரியின் இளவரசி தன் குழாத்துடன் வசித்துவருகிறாள் என்பதை டாக்டர் அறிவாராதலின் தன்னை அம் மாளிகைக்கே அம்மாது அழைத்துச்செல்கிறாள் என்று நிச்சயித்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் இளவரசியின் மாளிகையினுடைய தோட்டத்தைச் சுற்றிலுமிருந்த பெரிய மதில்வந்ததும் இராஜம்மாள் தன்னிடமிருந்த ஒரு சாவியால் அங்குள்ள கதவொன்றைத் திறந்து அதனுள் அழைத்துச் சென்றதும், மெல்லிய குரலுடன் இரகசியமாக, "இப்போதுதான் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்," ஒரு வார்த்தையும் பேசாதீர். நிசப்தமாக இருக்கவேண்டும்" என்றாள். அதன்படியே அவர் நடந்துகொள்வதாக ஒப்புக்கொண்டதற் கடையாளமாக டாக்டர் இராஜம்மாளின் கையை அழுத்தினார். அப்படி அவர்களிருவரும் தோட்டத்தின் வழியே போய்க்கொண்டிருக்கையில் டாக்டர் ஒருமுறை தன் கட்டைச் சிறிது தளர்த்திக் கவனித்துப் பார்த்ததில் அது இளவரசியின் மாளிகையாகவே இருக்கவேண்டுமென்று நிச்சயித்தார். ஆகவே இக்காரியத்தில் ஈடுபட்டதால் தனக்குப் பல வகைகளாலும் நிறைய வருவாய்க்கு வழி ஏற்பட்டதென்று நினைத்து மகிழலானார்.

இதற்குள் மாளிகையின் பின்புற வாயிலுக்கருகில் வந்துவிட்டதால் இராஜம்மாள் டாக்டரை தனியான படிக் கட்டுகளின் வழியே மாடிமீது அழைத்துச் சென்றாள். அம்மாடியின் தாழ்வாரத்தின்வழியே அவர்கள் போய்க் கொண்டிருக்கையில் அங்குள்ள அறைகளில் ஒன்றின் கதவு திறக்கப்பட்டு ஒருமாது எட்டிப்பார்த்தாள். அம்மாது வண்ணாத்தி சுவர்ணமே என்பதை நேயர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமில்லை என்றே கருதுகிறோம். அவள் எட்டிப் பார்க்கிறாளென்பதை அறிந்த இராஜம்மாள் அவளை உள்ளே போய்விடும்படி கையால் ஜாடைகாட்டியதால் அவ் வண்ணாத்தியும் திடீரென்று கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே சென்றாள். அடுத்த நிமிஷமே இராஜம்மாள் டாக்டர் மணவாளனை இரங்கம்மாளின் அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

இப்போது நாம் இவ்விஷயத்தை நிறுத்திவிட்டு மற்றோர் விவரத்தை நேயர்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. டாக்டர் மணவாளனும் இராஜம்மாளும் இரங்கம்மாளின் அறையில் புகும்போது இரவு மணி பதினொன்று இருக்கும். அவர்கள் அவ்வாறு புகுந்ததன் கால் மணிநேரத்துக்குப் பிறகு நான்கு குதிரைகள்பூட்டிய பெரிய வண்டி ஒன்று வெகுவேகமாக ஓடிவந்து மாளிகைக்கு நூறு கஜதூரத்தில் நின்றுவிட்டது. அதிலிருந்த மனிதர்கள் மூவர் கீழே இறங்கிக் கால்நடையாக நடந்துசென்று இளவரசியின் மதில்சுவா ஓரத்தில் யாருடைய வரவையோ எதிர்பார்ப்பவர் கள்போல் நின்றுகொண்டிருந்தார்கள். மற்றும் சில நிமிஷங் களுக்குள் கர்னல்மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் தனித் தனியே இருகுதிரைகள்மீது ஏறிக்கொண்டு வெகு வேகமாய் வந்து அம்மாளிகைக்கு ஐம்பதுகஜதூரத்தில் இறங்கிக்குதிரை

களை மரத்தில் கட்டிவிட்டு அவ்விடம்வந்தார்கள். அவர்களிருவரும் பிரயாணிகளைப்போல் வேடமணிந்துகொண்டிருந்தார்கள். அன்று இரவே அவர்கள் வெகுதூரம் பிரயாணம் செய்பவர்களைப்போல் காணப்பட்டனர். அவர்களிருவரும் வருவதற்குமுன் குதிரைவண்டியில்வந்து மாளிகையின் மதில் ஓரத்தில் காத்திருந்தவர்கள் யாரென்று நாம் சொல்லாமலே நேயர்களே யூகித்துக்கொள்ளலாமென நம்புகிறோம். அவர்கள் வெறியன், தொம்பன், தொப்பன் ஆகிய மூன்று கொடியர்களேயன்றி வேறு எவருமல்ல. அவர்கள் கர்னல்மாரப்பன், குமாரவேல்பிரபு ஆகியவர்களின் கட்டளைக்கிணங்கியே அங்கு வந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்து குமாரவேல்பிரபு, "நீங்கள் குறிப்பிட்டவேளையில் தவறாமல் வந்திருக்கிறீர்கள். இதுதான் வேலைக்காரர்களுக்கு ஒழுங்கு," என்றான். அதற்கு அவர்கள் "வேலை முழுவதுமே மிக ஒழுங்காகவும், ஜாக்கிரதையுடனும் விரைவிலும் முடிக்கப்படுவதை இப்போது நீங்கள் காணப்போகிறீர்கள். அம்மாதர்கள் வந்துநிற்கும் இடம் எது என்பதைக் காண்பித்துவிட்டு நீங்கள் போய்விடுங்கள். மற்ற வேலைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்," என்றார்கள்.

குமாரவேல்பிரபு ஒரு மரத்தின் கிளைபடர்ந்திருந்த சுவற்றின் ஒருபாகத்தைக் காட்டி, "இதோ இதன்மீது ஏறி உள்ளே குதித்துவிடு. அங்கே ஒருமாது உலாவிக்கொண்டிருப்பாள். உன் காலடிச்சத்தம் கேட்டதும் அவள் உன்னை நோக்கி ஆவலுடன் வருவாள். அப்போது நீ அவளைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்துவிடு. அவள் உன்பிடியினின்றும் தப்பித்துக்கொள்ள எவ்வளவுதான் முயன்றாலும் சிறிதும் இடங்கொடாமலும், ஆனால் அவளைத் தொந்திரை

செய்யாமலும் கொண்டுவந்து விடு," என்று வெறியனைநோக்கிச் சொன்னான்.

உடனே வெறியன் கர்னல் மாரப்பனை நோக்கி; "ஐய, உமது மாதைக் கொண்டுவருவதற்கு நாங்கள் எங்கேபோய்ப் பார்க்கவேண்டும்," என்றுகேட்டான். அதற்குக் கர்னல் மாரப்பன், "நாம் சிறிதுதூரம் போகவேண்டும்; இதோ இந்த இடத்தில்தான் என்காதலி வந்திருப்பாள். அவளைத் தூக்கிக்கொண்டு வரவேண்டிய விஷயத்திலும் நான் என் நண்பர் சொன்னதையே சொல்லவேண்டும். அதாவது அவள் உன்னைப்பார்த்ததும் அவள் வாயைமூடிவிட்டுப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு வந்துவிடவேண்டும்" என்றான்.

அதைக்கேட்ட வெறியன், "ஐயா, ஆடு தன் குட்டிகளைத் தூக்கிச்செல்வதுபோல அவ்வளவு நாஸூக்காகத் தூக்கிக்கொண்டு வந்துவிடுவோம். நீங்களொன்றும் அதிகமாக எங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நாங்கள் எங்கள் கடமையை நன்கு அறிந்திருக்கிறோம். நீங்கள் குதிரைமீது ஏறிக்கொண்டு போய்விடுங்கள். இன்னும் கால்மணி நேரத்துக்குள் நாங்களும் அவ்விடம் வந்துவிடுவோம்" என்று கூறினான்.

ஆகவே கர்னல்மாரப்பனும் குமாரவேல்பிரபுவும் அந்த மூன்று முரடர்களையும் தாங்களிட்ட வேலைகளைச்செய்யும்படி விட்டுவிட்டுத் தாங்கள் குதிரைகளைக் கட்டியிருந்த இடத்துக்குவந்து குதிரைமீது ஏறிக்கொண்டு பரிதிபுரத்துக்கு வெகுதூரத்துக்கு அப்பாலுள்ள ஒரு அகலமான ரஸ்தாவில் செல்லலாயினர்.

## 109 - வது அத்தியாயம்

இப்போது நாம் இளவரசியின் மாளிகையிலுள்ள அம்புஜத்தின் அறையில் அதேசமயத்தில் என்ன நிகழ்கின்றன என்பதைக் கவனிப்போம். அங்கே ஒரு மேஜையின்மீது மெழுகுவர்த்தி விளக்கொன்று சிறுபிரகாசத்துடன் எரிந்துகொண்டிருந்தது. அவள் தங்கை ஜானகியும் பக்கத்துக்குப்பக்கத்தில் போடப்பட்டிருந்த இருநாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு மிகக் கூர்மையான பார்வையுடன் ஏதோ மிக முக்கியமானதும் கவலையானதுமான ஒரு காரியத்தைப்பற்றி ஆழ்ந்து யோசித்துக்கொண் டிருந்தார்கள். அவர்களிருவரும் பாதி நிர்வாணமாக இருப்பதுபோன்ற இரவு ஆடைகளை யணிந்திருந்தபடியால் அருகில்சென்று உற்றுப் பார்ப்பவர்களுக்கு அவர்களுடைய அங்கங்கள் முழுதும் அவ்வாடைகளின் வழியே நன்ருகப் புலனுகும் போல் இருந்தது.

ஜானகி:—இவ்விஷயம் மிகவும் சங்கடமானதா யிருக்கிறது. இப்போது இதற்கு என்னசெய்வது?

அம்புஜம்:—அன்புள்ள தங்கையே நாம் இருவரும் இன்று இரவு நம்முடைய காதலர்களை யணுகாமல் விலக்கிவிட வேண்டியதுதான் என்று முன்னமே சொல்லவில்லையா? நாம் நமது காதலர்களிடம் இங்கு இந்நேரத்துக்கு வரும்படி சொன்னபோது இரங்கம்மாள் இவ்வளவு விரைவில்..........ஆயினும் பாதகமில்லை..........இப்போது நாம் என்ன செய்யவேண்டும் தெரியுமா.......... இராஜம்மாள் எந்தநேரத்திலும் இங்கு நம்மை நாடிவரக் கூடும்; ஆதலின் நாம் எப்போது கூப்பிடப்பட்டாலும் உடனே போவதற்குத் தயாராயிருக்கவேண்டும்.

[illegible]

ஜானகி:—அதெல்லாம் எனக்கும் தெரியும். ஆனால் நான் உடனே கீழேசென்று எனது காதலன் குமாரவேல் பிரபுவைப் பார்த்து நான் ஏன் இன்று அவரை என் அறைக்கு அழைத்துவர முடியவில்லை என்பதற்கு ஏதேனுமொரு சமாதானம் சொல்லிவிட்டு வரக்கூடிய அவகாசமேனும் எனக்களிக்கப்படுமென்றே நம்புகின்றேன்.

அம்பு:—நானும் கர்னல் மாரப்பனிடம் அவ்வாறு சொல்லிவிட்டு வருவதற்கு அவகாசம் கிடைக்குமென என் எதிர்பார்க்கலாகாது. இதுவோ சமயமாயில்லை. மற்றோர் அறையில் நடக்கும் காரியத்துக்கு எப்படிப்பட்ட அசந்தர்ப்பமும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். இராஜம்மாள் டாக்டரை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். ஆனால் அவள் மதிலுக்கு வெளியில் காத்திருக்கும் நமது காதலர்களைக் கண்டதாகவோ அல்லது அவர்களுடன் பேசியதாகவோ தெரியவில்லை. நாம் சிறிது அலட்சியத்துடனும் அஜாக்கிரதையுடனும் நடந்துகொண்டால் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டு விடுமென்பதைக் கவனிக்கவேண்டும்.

ஜானகி:—கர்னல் மாரப்பனையும் குமாரவேல் பிரபுவையும் இன்றிரவு இங்கே அழைத்துக்கொண்டு வரவேண்டும் என்று நான் சொல்லவில்லையே; நாம் இருவரும் அவர்களைக் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்கு வரும்படி சொல்லிவிட்டிருப்பதாலும், அவர்களும் அவ்வாறே வந்து காத்திருப்பார்களாதலாலும், அவர்கள் வீணாகத் தோட்டத்தின் வெளியில் உலாவிக் கொண்டிருந்து அவர்களை வேலையாட்கள் கண்டுபிடித்துவிடுவதற்குச் சந்தர்ப்பமளிக்காமலிருக்கும்பொருட்டு அவர்களிடம் சென்று சமாதானம் சொல்லிவிட்டுச் சில நிமிஷங்களுக்குள் திரும்பிவிடுவது நல்லதல்லவா என்று தானே நான் சொன்னேன்.

186552
சென்னை-600 008

# மாதவி மாதவன் 2-பாகம்

ர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பி பது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

## இரத்தினபுரி ரகசியம் 3-பாகம் விலை ரூபா 6

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான டக்கையும், ஊக்கமு முடையவனாயிருந்தால், அவன் தான் கோரிய ாரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவி ம் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கின் ன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் ண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன கிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# "ஆனந்தபோதினி"

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஸு ஜூலைமீ முதல் சென்னையில் பி[illegible] கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது த[illegible] பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இல[illegible] கிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்[illegible] ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்[illegible] இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலு[illegible] மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கு[illegible] ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம்[illegible] எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரா[illegible] வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசா[illegible] முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவ[illegible] களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இ[illegible] போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்[illegible] சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இ[illegible] ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்தி[illegible] யும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்[illegible] யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 [illegible] கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தப[illegible] கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிற[illegible] பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8 மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி | ரூபா 1 |
| 3-பாகமும் ... | 6 | 0 | தபால் கொள்ளைக்காரர் | 0 |
| பவளத்தீவு 2-பாகமும்... | 3 | 0 | ரத்தினபாய் ... | 1 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 |
| கனகபூஷணம் 2பாகம்... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 1 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 1 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 |

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ், 6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்